# இயல் - 4
# பெண்ணியச் சித்திரிப்பு

ஆண்டாள் பிரியதர்ஷினி படைப்புகள் வழி அவர் வெளிப்படுத்தும் பெண்ணியச் சிக்கல்கள், போராட்டங்கள் சமூக மாற்றங்கள், மதிப்பீடுகள் பற்றி ஆய்வதாக இவ்வியல் அமைகிறது.

## பெண்ணியமும் பெண்ணியச் சிந்தனையும்

பெண்ணியம் குறித்து இன்றைய காலகட்டத்தில் உலக அளவில் பேசத் தொடங்கியுள்ளனர்.

'பெண்ணியம்' என்ற சொல்லின் பொருள் விளக்கத்தையும், பெண்ணியத்தின் நோக்கத்தையும், பெண்ணியச் சிந்தனைபற்றியும் ஆ.பி. படைப்புகள் முன்னிறுத்தியுள்ளன.

'பெண்ணியம்' குறித்த வேறுபட்ட வரையறைகள், விளக்கங்கள், புரிதல்கள் பல உள்ளன. உலகில் உள்ள அனைத்துப் பெண்களின் முன்னேற்றத்தையும் சமத்துவத்தையும் அடிப்படையாகக் கொண்டெழுந்த ஓர் இயக்கத்தைக் குறிப்பதே பெண்ணியம் எனலாம்.

## பெண்ணியம் - சொற்பொருள் விளக்கம்

பெண் என்பவள் உலக இயக்கத்திற்கு முதற்பொருளாக விளங்குகிறாள். "பெண்ணை ஓர் உயிரி எனச் சமூகம் அங்கீகரித்து

அவளுக்கு ஆணுக்குச் சமமான உரிமையும், சுதந்திரமும் கொடுக்கத்தூண்டும் கொள்கையாகும்"[1] என்று இரா. பிரேமா பெண்ணியம் பற்றிய விளக்கத்தை எடுத்துரைக்கிறார்.

'Femina' என்ற இலத்தீன் மொழிச் சொல்லிலிருந்து 'Feminism' என்னும் ஆங்கிலக் கலைச்சொல் தோன்றியது. இச்சொல்லையே தமிழில் 'பெண்ணியம்' என்று கூறுகிறோம். "பெண்ணியம்" என்ற சொல்லுக்கு இணையான சொல்லாக 'பெண்விடுதலை இயக்கங்கள் மற்றும் பெண்நிலைவாதம்' என்ற சொற்களைப் பயன்படுத்திவருகின்றனர். பெண்நிலைவாதம் என்ற சொல் பெண்களை விவாத நோக்கில் பார்க்கிறது"[2] என்று இரா. பிரேமா குறிப்பிடுகிறார். 'பெண்ணியம்' என்ற சொல் ஆணுக்கு அனைத்து நிலையிலும் சமமானவள் என்ற பொருளைத் தந்து நிற்கிறது, எனலாம்.

## பெண்ணியம் - விளக்கம்

சமூகத்தின் அனைத்து நிலைகளிலும் பெண்விடுதலையைக் கோருவதே பெண்ணியத்தின் அடிப்படை என்ற கருத்தாக்கம் விளக்கப் பெறுகிறது.

"பெண்ணியம் என்பது, பெண்கள் பாலினப் பாகுபாட்டின்படி அனுபவிக்கும் தனிப்பட்ட பொருளாதாரத் துன்பங்களை எதிர்த்து மேற்கொள்ளும் இயக்கம்"[3] என்ற புட்சர் கருத்தை ச. முத்துச்சிதம்பரம் தனது நூலில் எடுத்துக்காட்டியுள்ளார்.

பெண் தன் எதிர்காலத்தை நோக்கிச் செயல்படவும், தங்களுடைய கருத்தை வெளிப்படுத்தவும் முயலுவதே 'பெண்ணியம்' எனலாம்.

முனைவர். தேவதத்தா சமூகத்திலும் வேலைத்தளத்திலும், குடும்பத்திலும் நிலவும் பெண் ஒடுக்குமுறை மற்றும் சுரண்டல் பற்றிய பெண்மையின் உணர்வு நிலைகளும் இந்நிலையை மாற்றுவதற்குப் பெண்களும் ஆண்களும் எடுக்கும் உணர்வுபூர்வமான நடவடிக்கையாகும்"[4] எனப் பெண்ணியத்திற்கு விளக்கம் தருகிறார்.

"ஆண்கள் எந்த அளவு சமூக அமைப்பிலும், பொருளாதாரத்திலும், அரசியலிலும் ஈடுபட்டு உரிமை கொண்டாடுகிறார்களோ அந்த அளவுக்குப் பெண்களுக்கு மேற்கூறிய துறைகளில் அனைத்து உரிமைகளும் வழங்கப்பட வேண்டும் என்று கூறுவதோடு, அதனடிப்படையில் நன்கு வரையறுக்கப்பட்ட சமூக அமைப்பை உருவாக்கித் தரவும் முயலுகிறது பெண்ணியம்"[5] என்று இரா. பிரேமா பெண்ணியம் என்ற கோட்பாடுபற்றிக் குறிப்பிடுகிறார்.

"பெண்ணியம் என்பது பெண்ணைப் பற்றிய தலைப்பு. இது பெண்களுக்கானதாகவும், சமூகம், அரசியல், பொருளாதாரம், சமயம், வரலாறு, மொழி ஆகியவற்றில் பெண்களின் பங்கினை விளக்குவதாகவும் அமைகிறது. எனவே, பெண்ணியம் என்பது பெண்ணியல், பெண்தத்துவம், பெண்ணியம் என்ற மூன்றும் சேர்ந்தது"[6] என்கிறார். கோ. சரோஜா. மேற்கூறிய பெண்ணியம் பற்றிய கருத்துக்களை நோக்கும்போது 'பெண்ணியம்' என்பது, ஆணுக்கு எதிரானது. இல்லற வாழ்க்கைக்கு முரணானனது, என்று கூறுவது தவறான கருத்தாகும்.

பெண்களின் அடிமைநிலையை மாற்றி எல்லாநிலைகளிலும் ஆண்களுக்கு நிகரான சமஉரிமை வழங்க முற்படும் கோட்பாடே 'பெண்ணியம்' எனலாம்.

## பெண்ணியத்தின் நோக்கம்

'பெண்ணியம்' என்பது ஆண், பெண் என்ற வேறுபாடு இல்லாத சமூகத்தை உருவாக்குவதையே நோக்கமாகக் கொண்டது. மேலும், ஆணும் பெண்ணும் சமமான வாழ்வைப் பெறவேண்டும் என்பதையும் நோக்கமாகக் கொண்டது எனலாம்.

இன்றையச் சமூக சூழலில் காணப்படும் ஆணுக்கும், பெண்ணுக்கும் உள்ள ஆதிக்க உறவுகளை உடைப்பதையே பெண்ணியம் தன் முதன்மை நோக்கமாகக் கொண்டுள்ளது.

மேலும், ஆண், பெண் என்ற இரு பாலரிடமும் காணப்படும் பாகுபாடுகளை நீக்க முயல்வதையே நோக்கமாகக் கொண்டுள்ளது என்பதையும் அறிய முடிகிறது.

ஆண்களுக்கு உரிய அனைத்து உரிமைகளையும் பெண்களுக்குப் பெற்றுத் தருவதையே முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது பெண்ணியம்.

மொத்தத்தில், பெண்ணியத்தின் குறிக்கோளும், நோக்கமும் சமூக, மனித மேம்பாட்டையே அடிப்படையாகக் கொண்டுள்ளன என்பதை உணர முடிகிறது.

## பெண்ணியச் சிந்தனை

பெண்ணுரிமை குறித்த சிந்தனைகளைப் "பெண்ணியச் சிந்தனை" எனலாம். பெண் விடுதலை பற்றிய சிந்தனைகள் உலகெங்கிலும் படிப்படியாக மலரத் தொடங்கியுள்ளன என்பதை அறியமுடிகிறது.

மேலைநாடுகளில் பெண்ணியம் 17 மற்றும் 18ஆம் நூற்றாண்டில் வளர்ச்சி அடைந்தது. பெண்ணியச் சிந்தனைக்கு 19ஆம் நூற்றாண்டிலும்,

20ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்திலும் சிறப்பிடம் இருந்தது”[7] என்பதை ‘இலக்கியத்தில் பெண்ணியச் சிந்தனை’ என்ற நூலின்வழி அறியமுடிகிறது.

20ஆம் நூற்றாண்டு ஏற்படுத்திக்கொடுத்த பல மாற்றங்களின் அடிப்படையில் எழுந்ததே பெண்ணியச் சிந்தனை. “பெண்ணியம் என்பது திடீரென்று பிறந்து, வளர்ந்த இயக்கம் அன்று. இவ்வியக்கத்தை உருவாக்க, வளர்க்கச் செயல்பட்டவர்கள் சுமார் 3 நூற்றாண்டைச் சேர்ந்தவர்களாவர். 17ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ‘அப்ராபென்’ முதல் இன்றைய ‘கேட்மில்லட்’ வரை பலரும் பெண்ணியத்தின் அடிப்படைச் சிந்தனைத் தூண்டல்களை ஆக்கித் தந்துள்ளனர்”[8] என்று சித்து மா. சாலமன் பெண்ணியச் சிந்தனையின் தோற்றம் பற்றிக் குறிப்பிடுகிறார்.

சமூகத்தில் பெண், ஆண்களுக்கு அடிமையாகவும், உரிமை இழந்தவளாகவும், ஒரு பாவப்பிறவி என்ற நிலையிலும், ஆண்கள் மத்தியில் காணப்படுகிறாள். இந்நிலையிலிருந்து பெண் விலகி வருவதையே ‘பெண்ணியச் சிந்தனை’ எனலாம்.

கல்வி கற்கும் நிலையிலும், தன் வாழ்க்கைத்துணையைத் தேர்ந்தெடுக்கும் நிலையிலும் பெண் உரிமை இழந்தவளாகவும், ஆண்சமூகத்தின் உடைமைப் பொருளாகவும் காணப்படுகிறாள்.

மேலும், விதவைக் கோலத்திலும், வாழாவெட்டி என்ற நிலையிலும் அவள் தன்னை அழகுபடுத்திக் கொள்வதை இச்சமூகம் இன்னும் ஏற்றுக் கொள்ளவில்லை. இவ்வாறான பல நிலைகளைப் பெண் கடந்து சமஉரிமை பெற முயல்வதே பெண்ணியச் சிந்தனை.

‘பெண்ணியச் சிந்தனை’ என்பது, பெண்களை ஒரு மனிதப் பிறவியாகவும் அவளை ஒரு உயிரியாகவும் எண்ணும் மனோபாவமின்றி,

அவளைத் துன்புறுத்தல் கூடாது. எல்லாநிலையிலும் ஆணுக்குச் சமமான உரிமை பெண்ணுக்கும் தரவேண்டும் என்பதையே நோக்கமாகக் கொண்டது, என்பதை அறியலாம்.

"பெண்ணியச் சிந்தனை" உலகளவில் கடந்துவந்த பாதைகளை அறிய வேண்டிய அவசியம் இருக்கிறது. இந்த நூற்றாண்டுத் தமிழ் நாவல் வளர்ச்சியின் தொடக்கத்திலேயே பெண்ணியச் சிந்தனையின் வளர்ச்சியைக் காணமுடிகிறது.

பெண்களுக்கு ஏற்படுகின்ற சிக்கல்களைத் தாமே எதிர்த்து நின்று போராடுகின்ற விழிப்புணர்வை அடையப் பெண்ணியச் சிந்தனை வேண்டும். இருட்டையே வெளிச்சம் என்று நம்பி வாழும் பெண்களுக்கு, அவர்கள் இருப்பது இருட்டில் என்று சுட்டிக் காட்டும் படைப்புகளே பெண்ணியச் சிந்தனைப் படைப்புக்களாகும்"[9] என்று 'இலக்கியத்தில் பெண்ணியச் சிந்தனைகள்' என்ற நூல் அறிவுறுத்துகிறது. மேலைநாட்டு அறிஞர்கள் "பெண்நிலை" பற்றித் தொடங்கிய சிந்தனையே உலகெங்கும் பரவிய பெண்ணியச் சிந்தனையின் வளர்ச்சிக்குக் காரணமாகும் எனலாம்.

சமுதாயத்தில் பெண்கள் வாழ்க்கைத்துணைவி, குடும்பத்தலைவி எனும் நிலைமாறி, ஆடவர்தம் போகப் பொருளாகவும், மகப்பேறு இயந்திரமாகவும், நிலைகுன்றி அடிமை போலாயினர். பெண்களின் உள்ளத்தின் வலிமை, உடலின் வலிமை குறித்து, "மாதர்கள் உமியல்ல" என்கிறார், பாரதிதாசன். அவர் பெண்களின் பூங்கரங்கள் தேவைப்படின் தீயவரின் உயிரை அழிக்கும் படையாகவும் செயல்படக்கூடிய உறுதியும், ஆற்றலும் கொண்டன என்பதை,

"உமியல்ல மாதர் வலக்கை தீயர்

உயிரை இடிக்கும் உலக்கை"[10]

என்று கூறுகிறார்.

## தொல்காப்பியர் காலத்தில் பெண்கள்

ஆண்-பெண் சமத்துவத்தைத் தொல்காப்பியர் காலத்தில் மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

"அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்

நிச்சமும் பெண்பாற்குரிய என்ப"[11]

என்னும் தொல்காப்பியர் கருத்து இதற்குச் சான்றாக அமைந்துள்ளதைக் காணலாம்.

## தற்காலப் பெண்கள்

மன்னராட்சிக் காலத்தில் வாக்குரிமை, கற்கும் உரிமை முதலியவை பெண்களுக்கு மறுக்கப்பட்டன. ஆணாதிக்கத்தால் பெண்ணின் கற்பிற்கு ஆண்கள். பாதுகாப்பாக உள்ளனர் என்ற சிந்தனை வலுப்பெற்றது. ஆனால், அத்தகைய காவலால் எவ்விதப் பயனுமில்லை என்பார் வள்ளுவர்.

"சிறைகாக்குங் காப்பெவன் செய்யும் மகளிர்

நிறைகாக்குங் காப்பே தலை"[12]

என்பது வள்ளுவர் வாக்கு. இத்தகைய புதுமைச் சிந்தனையை விரும்பிய கவிஞர் பாரதி,

"வீட்டுக்குள்ளே பெண்ணை பூட்டி வைப்போமென்ற

விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்"[13]

என்று புதுமைப் பெண்ணைப் படைத்து ஆனந்தக் கும்மி கொட்டினார். "ஒரு பெண்ணின் கல்விக்குச் செலவிடும் பணம், ஒரு குடும்பத்தின் வளர்ச்சிக்குச்

செலவிடுவதாகும்''[14] என்ற சிந்தனை வலுப்பெற்றது. பாரதியார், பாரதிதாசனார் போன்றோர் பெண்ணடிமை குறித்தும், அதற்குக் காரணமான பெண் கல்வியின்மை, குறித்தும் குரல் கொடுத்தனர்.

"ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்று
எண்ணியிருந்தவர் மாய்ந்துவிட்டார்''[15]

என ஆணாதிக்கமிக்க தன்னலவாதிகளின் சிந்தனையைத் தகர்த்தெறியும் புதுமைப் பெண்களைப் படைத்துப் பாரதியார் பெண்மையைப் பொலிவுறச் செய்தார். கவிஞர் பாரதிதாசன்,

"எல்லா நலமும் ஈந்திடுங் கல்வி
இல்லா வீட்டை இருண்ட வீடென்க''[16]

எனப் பெண்கல்வியின் தேவையை வலியுறுத்தினார்.

## ஆண்டாள் பிரியதர்ஷினியின் புதினங்களில் பெண்ணியம்

இக்காலப் பெண்ணிய எழுத்தாளர்களுள் குறிப்பிடத்தக்கவர் கவிஞர் ஆ.பி. ஆவார். ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட ஆ.பி.யின் புதினங்களில் பெண்களுக்கு ஏற்படும் சிக்கல்களும், அவற்றைத் தகர்த்தெறியும் நிலைகளும் சுட்டிக்காட்டப்பெறுகின்றன. சாதி, மத, இன, மொழி வேறுபாடின்றி இன்றைய நடைமுறை வாழ்க்கையிலும், சமுதாய வாழ்க்கையிலும், குடும்ப வாழ்க்கையிலும் பெண்கள் பல்வேறு சிக்கல்களுக்கு ஆளாக நேரிடுகின்றது. அத்தகைய சிக்கல்களுக்குத் தீர்வு காணும் நோக்கில் ஆ.பி.யின் புதினங்கள் பல அமைந்துள்ளன.

இல்லறமாகிய நல்லறம் நடத்துவதற்காக, வாழ்க்கைத் துணையைத் தேடுகின்ற ஆண்மகன், பெண்ணைத் தனக்கு கீழாகவே கருதுகின்றான். பெண்களுக்கென மனம், சுதந்திரம், விருப்பம், வெறுப்பு

உண்டு என்பதைச் சிந்திக்காமல் பெண் ஆணுக்கு அடிமைப்பட்டவள்; அதுவே நீதி என்று வேதாந்தம் பேசிக் கொண்டிருக்கின்றான். அந்நிலை இன்று மாறி வருகிறது.

ஆணாதிக்கம், வரதட்சணைக் கொடுமை, பாலியல் சிக்கல்கள், கொலை, கொள்ளை, கற்பழிப்பு, ஏமாற்றுதல் போன்ற அநீதிகள் குடும்பத்தினராலும், சமூகத்தினராலும் பெண்களுக்கு இழைக்கப்படுகின்றன. இந்தச் சூழல்கள்தான் அவர்களைச் சிந்திக்கத் தூண்டுகின்றன. இவ்வநீதிகள் பெண்ணின் நுட்பமான விழிப்புணர்ச்சியாலும், துணிவான புரட்சிக் குரலாலும் தட்டிக்கேட்கப்படுகின்றன.

பெண்ணும், ஆணும் சேர்ந்து வாழ்கின்ற இச்சமுதாயச் சூழலில் ஆணாதிக்கம் விஞ்சி நிற்பதனைப் பல நிலைகளில் பார்க்க முடிகின்றது. கல்வி வாய்ப்புகள், அதனைத் தொடர்ந்து வேலைவாய்ப்பு, ஊதியநிலை, குடும்பப் பொறுப்புகள், பொதுவாழ்க்கை அனைத்திலும் பெண்களுக்கு எதிராக அநீதிகள் இழைக்கப்பட்டுக்கொண்டே இருக்கின்றன. இந்தச் சூழல்கள் இப்போது மாற்றங்களைச் சந்திக்க ஆரம்பித்துள்ளன. பெண்களின் மிக நுட்பமான விழிப்புணர்ச்சியாலும், துணிவான புரட்சிக் குரல்களாலும்தான் சமுதாயத்தில் இந்த மாற்றம் கால்கோள் கொண்டு வளரத் தொடங்கியுள்ளது எனலாம். ஆ.பி.யின் புதினங்கள் வழி நுணுகிப் பார்த்தால் இவ்வுண்மை புலனாகும்.

## மனச்சிக்கல்

மனச்சிக்கல் என்பது மனம் + சிக்கல் என்ற இரு சொற்களின் இணைப்பாகும். ‘மனம்’ என்பது நுண்பொருள். ‘மனம்’, ‘உள்ளம்’ ‘mind’ என்பன ஒருபொருட் சொற்களாகும். மனத்தைப் பிற உடல் உறுப்புகளைப்

போல இத்தகையது, இவ்விடத்துள்ளது என்று வரையறுத்துக் கூற இயலாது. ‘மனம்’ என்பதற்கு ‘ஒருவரின் எண்ணம், உணர்வு போன்றவற்றுக்குக் காரணமாக அமைவது “உள்ளம் Mind, The Reasoning faculty துக்கத்தால் மனம் கனத்தது”[17] எனத் தற்காலத் தமிழ் அகராதி விளக்கம் தருகிறது.

‘மனம்’ என்ற சொல்லுக்கு, ‘விருப்பம்’, ‘Intention’, ‘desire, mind’ என்ற பொருள்களும் காணப்படுகின்றன. “மனம் போல வாழ்வு”, “வீட்டுக்குத் திரும்ப மனம் இல்லாமல்”[18] என்பனவற்றில் ‘மனம்’ என்பது விருப்பம் என்னும் பொருளைத் தருகிறது.

‘சிக்கல்’ என்ற சொல்லுக்கு ‘எளிமையாக இல்லாதது’, ‘சுலபமாகத் தொடர்புபடுத்த முடியாத’ பல கூறுகளைக் கொண்ட தன்மை, ‘Complexly’ ‘Complication’ தீர்வு காண முடியாதது. பிரச்சினை ‘Problem’, ‘difficulty’ ”[19]ஆகிய பொருள்கள் காணப்படுகின்றன.

“உணர்வு நிலையில் உள்ளத்திற்குக் கசப்பையும், எரிச்சலையும், குழப்பதையும் உண்டாக்கும் இவ்வுணர்ச்சி உள்ளத்தைப் பெரிதும் தாக்கி ஆறாப்புண் உண்டாக்காமல் இருக்க, நனவு உள்ளத்திலிருந்து நனவிலி உள்ளத்திற்குத் தள்ளிவிடப்படும்போது சிக்கலாக மாறுகிறது”[20] என்று உளவியலார் குறிப்பிடுகின்றனர்.

சிக்கல், வாழ்க்கையையே போராட்டமாக்கி விடுகிறது. போராட்டத்தில் வெற்றியும் ஏற்படுகிறது. தோல்வியும் ஏற்படுகிறது. போராட்டத்தில் வெற்றி கண்ட பெண்கள் மகிழ்ச்சியாக வாழ்கின்றனர். தோல்வி கண்ட பெண்கள் இறப்பைத் தீர்வாகக் கொள்கின்றனர். சில வேளைகளில் ஆழ்மனத்திற்குச் சென்ற சிக்கல்கள் அதிர்ச்சியைத் தந்து உளநோயாக மாறுகின்றன.

பெண்ணின் இத்தகைய வாழ்க்கைச்சூழலை ஆராய்கின்றபொழுது, பெண்ணுக்கு ஏற்படும் மனச்சிக்கல்களை ‘உடலியற்சிக்கல்’ ‘உளவியல்சிக்கல்’ ‘சமூகச்சிக்கல்’ என மூவகையில் ஆராயலாம். இவ்வகைப்பாட்டின் துணைகொண்டு பெண்ணின் மனச்சிக்கல்களை முழுமையாக உணர முடிகின்றது. கால மாற்றத்தின் அடிப்படையில் தோன்றும் பண்பாடு மாற்றத்தின் விளைவாகப் பெண்கள் மரபு வழிச் சிந்தனையின் அடிப்படையில் தோன்றிய பல சிக்கல்களைத் துணிவுடன் எதிர்த்து நிற்கக்கூடிய ஆற்றல் பெற்றவர்களாகின்றனர். இம்மாற்றம், பெண்களின் சிக்கல்களுக்குத் தீர்வையும் தருகிறது. பெண்களுக்குச் சிக்கலிலிருந்து விடுபட விழிப்புணர்வையும் தருகிறது.

தற்காலப் படைப்புகள் வாழ்க்கையை வெளிப்படுத்தும் சமூக ஆவணங்களாக விளங்குகின்றன என்பதனை மறுக்க இயலாது. படைப்புகளின்வழி பெண்களின் வாழ்க்கைநிலையையும் அறியமுடிகிறது. ஆ.பி. படைப்புகளில் பெண்களின் மனச்சிக்கல்கள் மிகுதியாகச் சித்திரிக்கப்பட்டுள்ளதால் அவர், தம் படைப்புகளின்வழி ஆராயப்படும் பெண்களின் மனச்சிக்கல்கள்,

- குடும்பச் சிக்கல்கள்
- சமுதாயச் சிக்கல்கள்
- அலுவல் சிக்கல்கள்

என பலச் சிக்கல் நிலைகளில் ஆராயப்படுகின்றன.

## பெண் மனச் சிக்கல்கள்

உலகில் பிறக்கும் அத்தனை மனிதர்களும் அமைதியான வாழ்க்கையை விரும்புகின்றனர். மனிதப் பிறவிகள் அனைவரும் சமம்

என்னும் கோட்பாடு காணப்பட்டாலும், நடைமுறை வாழ்க்கையில் ஆண், பெண் ஆகிய இருவரின் சமூக மதிப்புகள் வேறுபட்டுத்தான் காணப்படுகின்றன என்பது உண்மை. காலம் காலமாக ஆண் என்பவன் தலைமைத் தன்மை உடையவனாகவும், பெண் என்பவள் அவனுக்கு அடங்கி வாழ்பவளாகவும்தான் சமுதாயநிலையில் காணப்படுகின்றாள். சமுதாயத்தின் இரண்டாம் நிலைக்குத் தள்ளப்படும் ஒரு பெண் அமைதியான வாழ்க்கைக்கு ஆசைப்படுதல் என்பது இயலாத ஒன்றாகக் காணப்படுகிறது. ஆண் எனும் அடக்குமுறைச் சமுதாயம் பெண்ணுக்குப் பல வகைகளிலும் இன்னல்களை இழைக்கின்றது. அவள் இனத்தைச் சார்ந்த பெண்ணே அவளுக்குத் துன்பம் தருவதில் மகிழ்கிறாள். சமுதாயத்தின் ஆதரவும், அன்பும் அற்ற நிலையில் பெண் பல வகைச் சிக்கல்களைச் சந்திக்க நேரிடுகிறது. இச்சிக்கல்கள் உடலுடன் தொடர்பு கொண்டவையாகவோ, உள்ளத்துடன் தொடர்பு கொண்டவையாகவோ (அல்லது) அவள் ஒன்றி வாழும் சமுதாயத்துடன் தொடர்புடையதாகவோ இருக்கலாம். பெண்ணுக்கு ஏற்படும் சிக்கல் என்பது மனத்துடன் மிக நெருங்கிய தொடர்புடையது.

## பெண்களின் மன உணர்வுகளும் சிக்கலும்

“இன்றைய பெண்களின் நிலையை ஆராயும் பொழுது வீட்டளவிலும், தொழில்துறைகளிலும் படிப்பறிவில்லாத உழைப்பாளிப் பெண்களே எண்ணிக்கையில் மிகுதியாக இருக்கின்றனர்”[21] என்று செண்பகம்ராமசாமி ‘பெண்கள் படைப்பில் பெண்கள்’ என்ற நூலில் பெண்கள் நிலை பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

ஆ.பி.யின் ‘தகனம்’ புதினத்தில் படிப்பறிவில்லாத முனியம்மா, சின்னப்பொன்னு, ராணி, கோவிந்தம்மா ஆகிய பெண்பாத்திரங்கள் தம்

வயிற்றுப்பசி காரணமாகவும் தன் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணத்தினாலும் சிறுவயதிலேயே படிப்பை நிறுத்தி வெட்டியான் தொழில் செய்து வருகின்றனர்.

பிணம் எரிக்கும் பெண் வர்க்கத்தை தகனத்தில் முன்னிறுத்தி ஆ.பி. ஆண் சமூகத்திற்குச் சவால் விடுகிறார்.

## வறுமையும் பெண்களும்

வறுமை என்பது கொடிய நோய். இன்றைக்கு நாம் உலக நாகரிக வாழ்வின் முன்னேற்ற எல்லையைத் தொட்டுக் கொண்டிருக்கும் காலகட்டமெனக் கூறலாம். ஆனால் அதே வேளையில், வறுமையின் காரணமாகப் பசியால் துடிக்கும் மக்களின் எண்ணிக்கையும் அதிகமாகவே உள்ளன.

'தகனம்' புதினத்தில்,

"வாய்க்கரிசி வந்தால்தான் வயிற்றுக்குக் கஞ்சி" (தகனம். ப.6)

"எனக்கு வார வரத்துல. . .மயானத்துச்சிதை நெருப்புல போயி சோறு பொங்கிரலாமான்னு வருது மாரி. . . வயிறு எக்கி ஊதி, கண்ணு கரிச்சு நாசமாப் போறன். . . .அரை வவுத்துக் கஞ்சிக்கு இந்தப்பாடு. பொட்டைப் பொறப்பு. . . நாய விட சீரழிப்பாயிருச்சு" (தகனம்.ப.29)

"ஒரு வாரமாய்ச் சடலம் ஏதும் வராததால் கூலி கைக்குக் கிடைக்கவில்லை. எரிக்க ஏதும் வராவிட்டால் என்ன? வயிற்றில் பசி நெருப்பு சுட்டெரிக்கிறதே. . .

"பொம்பளைப் புள்ளைக்கி ஏன் இந்த நாறத்தொழிலு? சரி கௌம்பறோம். இன்னுங் கொஞ்சம் நின்னா எங்களைத்தான் எரிக்க வேண்டியிருக்கும்" (தகனம், ப.103) எனப்பசியின் கொடுமையால் வறுமையால்

மக்கள் துடிப்பதையும், பெண்களை இழிவுபடுத்தும் நிலையையும் காணமுடிகிறது.

'சூ.வி.வை' புதினத்தில்,

"சௌக்கியமா சங்கரம்மா. . . ?"

"ஏழைக்கேதும்மா சவுக்கியம்?

பசி, பட்டினி பஞ்சம் இப்படி

ருசியில்லாத வாழ்க்கை. . . "

புலம்பலைத் தவிர

வேறுமொழி அறியாதவளின்

வறுமைப்பேச்சு

வெறுமை மூச்சு" (சூ.வி.வை., ப.72)

எனச் சங்கரம்மாவின் குடும்பச்சூழலை, வறுமையை ஆசிரியர் சித்திரித்துக்காட்டியுள்ளார்.

## திருமணமும் பெண்களும்

ஆண், பெண் சமம் என்ற நிலை குடும்பத்தில் உருவாவதற்கு வாழ்க்கை உருவாகும் அடித்தளத்திலேயே, அதாவது திருமணத்தின்போதே சமநிலைகள் உருவாக்கப்பட வேண்டும். இல்லையெனில், திருமணத்திற்குப் பின் பெண்கள் பல சிக்கல்களுக்கு ஆளாவார்கள் என்பதை அறியலாம்.

மரபுணர்வுப் பெண்கள், படித்த பெண்கள், படிக்காத பெண்கள், வசதியுடைய பெண்கள், சராசரிப் பெண்கள் அனைவருமே திருமணம் என்னும் கட்டுக்குள் ஒவ்வொரு வகையில் ஒவ்வொரு விதச்சிக்கல்களை எதிர்கொள்கின்றனர் என்பதை ஆசிரியர் கதையின் வழி எடுத்துக்காட்டியுள்ளதைக் காணமுடிகிறது.

சாதிக்கவேண்டிய வயதில் ஒரு குழந்தைக்குத் தாயாகும் நிலை கொடுமையானது என்பதை ‘கனவுகள் கைப்பிடிக்குள்’ புதினத்தில் மீனாவின் கூற்றால் ஆசிரியர் பின்வருமாறு எடுத்து இயம்புகிறார்.

“இருபத்தி ரெண்டு வயசுக்கெல்லாம் வெட்கப்பட்டு மணமகளாக உக்கார்ந்து தாலி வாங்கறது கொடுமை. சாதிக்க வேண்டிய வயசுல, வயித்தைத் தள்ளி வந்தா நல்லாவா இருக்கும்”. (க.கை.பி. ப.86)

திருமணத்தால் வீண் பிரச்சினை வாக்குவாதம் எரிச்சல் ஏற்படும் என்று கூறும் காயத்ரியின் வார்த்தைகளின் வாயிலாகப் பெண்களுக்குத் திருமணத்தின் பொருட்டு சிக்கல்கள் இயல்பாகவே ஏற்படும் என்பதை ஆசிரியர் ‘சிகரம் சிலந்திக்கும் எட்டும்’ புதினத்தில் விளக்குகிறார்.

“கல்யாணமானாலே சில குண மாற்றங்கள் வரும். பொஸஸிவ்னெஸ் வரும் எஜமான். அடிமை உணர்வு வரும்” (சி.சி.எ., ப.176)

பெண்களுக்குத் திருமணம் ஒன்றுதான் முடிந்த முடிவு என்பதற்கு இணங்க கிராமப் பெண்களுக்கு நிச்சயமானபடி கல்யாணமாகவில்லை என்றால் அவர்களுக்கு அதுவே வாழ்க்கையின் முடிவும், விடிவும் ஆகும் என்பதை ‘விலை’ புதினத்தில் ஆண்டியம்மாவின் புலம்பலைப் பின்வருமாறு ஆசிரியர் வெளிக்காட்டியுள்ளார். “ஐயோ. . . போறாகளே. . . சம்பந்தியம்மா மனசு வருந்திட்டு போறாகளே. . .கடவுளே ஏஞ்சாமி. . .உனக்குக் கண்ணு இல்லியா. . . எம் பொண்னை இனிமே யாரு கட்டுவா? நிச்சயம் பண்ணி வேணாம்னு உதறிட்டுப் போன பெண்ணை யாரு சீந்துவாக இனிமே? கடைசி மூச்சு வரைக்கும் கழுத்திலே தாலி வாங்காம வாழா வெட்டியா தனிக்கட்டையா இருக்கணுமா? எப்பிடி எம்மவளைக் கரையேத்த. . . .?” (விலை., ப.27) வே.ம. புதினத்தில் பெண்களுக்குத்

திருமணம் என்பது வாழ்வின் குறிக்கோள் அன்று. அது, வாழ்வின் ஒரு கூறு என்பதை ஆசிரியர் வெளிப்படுகிறார்.

ஆண்கள் துணை இல்லாமல் பெண்களால் தனித்து வாழ முடியும் என்பதை, ஆசிரியர் ‘விடியும் நேரம்’ புதினத்தில் ராணி என்ற பாத்திரம் வழி விளக்குகிறார்.

“ஏண்டி கல்யாணம் கல்யாணம்னு அலையறீங்க? தனியாத்தான் இருந்து பாருங்களேன். . . .உடம்புகேக்காதோ. . . .? (வி.நே., ப.9)

ஒரு பெண்ணுக்கு ஆண்துணை அவசியம் என்பதையும் மரபுணர்வுப் பெண்களின் மூலமும், பெண்களுக்கு ஆண்துணை அவசியம் இல்லை என்பதை படித்த பெண்களின் மூலமும் ஆசிரியர் சூழலுக்கு ஏற்றவாறு புதினங்களில் வெளிப்படுத்தியுள்ளார்.

## பெண்ணடிமை

சமுதாய முன்னேற்றத்திற்குப் பெண்கள்விடுதலை இன்றியமையாதது என்னும் உண்மையை உணர்ந்த பாரதியார், அது பற்றி உணர்ச்சிமிக்க பாடல்களை இயற்றியுள்ளார்.

“மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமையைக் கொளுத்துவோம்”[22]

என்று சீற்றத்துடன் கூறியுள்ளார்.

பெண்ணே, பெண்களைப் பழித்தல், ஆண்களும் பெண்களை ஒடுக்குதல் எனப் பெண்களுக்கான ஒடுக்குமுறைகளை ஆசிரியர் தன்னுடைய படைப்புகளில் சித்திரித்துக்காட்டுகிறார்.

‘சி.சி.எ’ புதினத்தில்,

“கல்யாணம் முடிந்து புகுந்த வீடு வந்தவுடன் இதப்பாரு பிரபா . . . சும்மாவேணும் கதை எழுதறேன் கவிதை எழுதறேன்னு நேரத்தை வீணாக்காதே. பேப்பர் இங்க்குன்னு பணமும் வேஸ்ட்டு, நீ எழுதுற சுண்டைக்காய் கவிதைக்கு எவனும் நூத்துக் கணக்குல பணம் குடுத்துட மாட்டான் அதனாலேயே நேரத்தையும், பணத்தையுமாவது மிச்சம் புடிக்கணும்”. (சி.சி.எ., ப.156)

பிரபா கல்லூரி படிக்கும் போதே பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி, கவிதைப்போட்டி என்று எல்லாவற்றிலும் கலந்து கொள்வாள். கல்யாணம் முடிந்து புகுந்த வீட்டிற்கு வந்தவுடன் பிரபாவின் சுதந்திரம் பறிபோய் விட்டது. இதற்கு முட்டுக்கட்டையாக பிரபாவின் மாமியார் கமலா இருந்தாள். மேலும், ‘சூ.வி.வை’ புதினத்தில்,

“ஏனம்மா இப்படி?

மருமகளின் சமூக சேவையிலும்

வெறுப்பு.

மகளின் காவல் பணியிலும் வெறுப்பு.

ஏனம்மா இப்படி . . . ?”

“ப்ச் . . . பொண்ணுங்கறவ

வீடு குடும்பம்னு இருக்கணும் தம்பி

வீதியில இறங்கிட்டா

வீடு நாறிடும்

சமூகத்துல அவளோட

பேரும் மாறிடும் . . . ”

- சுவாசம் போல் பெட்டைப் புலம்பல். (சூ.வி.வை., பக்.47-48)

என அவரது மாமியார் கூற்றை ஆசிரியர் பதிவாக்கியுள்ளார்.

ஒரு பெண்ணுக்கு கணவன் வீட்டார் கொடுக்கும் தொல்லைகளையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

“மருமகளின்
குற்றப் பத்திரிகை கேட்டுக்
கொதிகலனாய் வெடித்தாள் ஜானகி
. . . . . . . . . . . . . .
. . . . . . . . . . . . . .
கொண்டவனைக் குறைசொல்லிக்
கற்பின்றி நிந்திக்கிறாய் . . . . ”
- நொடித்தார்.
நொடிக்கு நூறுதரம்
வெடித்தார் மாமனார். (சூ.வி.வை. பக்.92-93)

என விஜயாவின் மாமியார், மாமனாரின் கொடுமைகளைப் பதிவு செய்துள்ளார்.

பெண்களைக் கொடுமைப்படுத்துவதோடு மட்டுமில்லாமல், உயிர்க் கொலையும் செய்யத் துணிகிறார்கள். பெண்சிசுக் கொலையும் எளிமையாகச் செய்யப்படுகிறது என்பதைச் சித்திரித்துக்காட்டுகிறார்.

“கழுத்திலிருந்து
கால்நுனி வரைக்கும்
நெருப்புச் சர்வாதிகாரியின்
எரிப்பு ஊர்வலம்தான்
இறந்த பின்னால்

உடல் வேகும் காட்சிக்கு
ஒத்திகை நடந்த
அவளின் உடம்பில்
ஒட்டியிருந்தது உயிர்மட்டும்தான்.
அதுவும் எந்நேரமும்
உதிர்ந்துவிடும் . . . . " (சூ.வி.வை. ப.100)

என விஜயாவின் குடும்பத்தார் விஜயாவிற்கு மகப்பேறு இன்மையால் அவளை எரித்துக் கொன்றுவிடுகின்றனர்.

## பெண்சிசுக் கொலை

பெண்பிள்ளை பிறந்தால் பாவம் என்று கருதியும், வளர்ந்து வந்தால் வரதட்சணை கொடுக்க வேண்டும் என்பதாலும், பெண் பிள்ளை வாரிசு ஆகமுடியாது என்றும், பெற்றோர்களுக்குக் கொள்ளி வைக்க முடியாது என்றும் பலவாறாக மூடநம்பிக்கை கொண்டு பெண்குழந்தையைப் பிஞ்சிலேயே அழித்து விடுகிறார்கள்.

குழந்தை என்பது திருமணம் முடிந்த ஆணுக்கு ஆண்மையையும், பெண்ணுக்குப் பெண்மையையும் நிர்ணயிக்கும் பிறப்பு ஆகும். ஆனால் முன்பு ஆண், பெண் வேறுபாடற்று எல்லாக் குழந்தைகளையும் ஆதரித்தனர். காலம் போகப் போக வேறுபாடு தொடங்கியது.

ஆண் குழந்தைகளை ஆதரிப்பதோடு பெண் குழந்தைகளை நாய்க்கும் கீழாக மதிக்கின்றனர் என்பதை,

"நாய் என்று பெண்ணை நவில்வார்க்கும் இப்புவிக்குத்
தாய் என்று காட்டத் தமிழர்க்கு வாய்த்தவளே" [23]

(பாரதிதாசன் கவிதைகள், ப.209)

என்று பாரததாசன் குறிப்பிடுகிறார்.

‘சூ.வி.வை.’ புதினத்தில்,

“தாய்ப்பால் குடிக்கவெனத்

தவமிருந்த வேளையிலே

கள்ளிப்பால் குடிக்க வைத்துக்

கண்மூடச் செய்தாயே . . . ?

தன் வயிற்றில் உதித்த

குஞ்சுச் சூரியனை

ஈரத் துணியால்

தலையோடு காலாய்ப் போர்த்தி

வைக்கோல் போரில்

புதைத்து வந்த சோகம்

சங்கரம்மாவைக் குதறியது. (சூ.வி.வை. பக்.50-59)

இவ்வாறு பெண்சிசுக் கொலை நிகழ்வை ஆசிரியர் பதிவாக்கியுள்ளார்.

“தலையைத் தொட்டிநீரில்

உரசினாள்

. . . . . . . . . . . . . . .

வயிற்றை நிரப்பியதால்

தலைகீழாய்ப் பயணித்தது

மூச்சுக் குழாயை நிரப்பி

மூச்சடைக்க வைத்தது

. . . . . . . . . . . . .

மெதுவாய் . . . மெதுவாய் . . .

மிகமெதுவாய் . . . மிகமெதுவாய் . . .

தொட்டிக்குள்

குழந்தைச் செடியைப் புதைத்தாள்

பெண் செடியை உயிரோடு

தண்ணீரில் விதைத்தாள். (சூ.வி.வை. பக்.114-115)

என்று தாய்ப்பால் அருந்த வேண்டிய குழந்தை பெண்ணாகப் பிறந்துவிட்ட ஒரே காரணத்தால் கள்ளிப்பால் ஊட்டியும், வயிற்றுக்குப் பால் கொடுத்துவிட்டு நிறைந்த தண்ணீர்த் தொட்டியில் தலைகீழாக மூழ்கடித்துக் கொல்வதும் ஆகிய சமூக அவல நிலைகளைச் சுட்டிக் காட்டுகிறார்.

## பெண் புலம்பல்

பெண்ணாகப் பூமிதனில் பிறந்தாலே சிக்கல்கள் பல உண்டு என்று ஆணில் இருந்து பெண்ணாக மாறிய தீபா, பெண்ணாகியதால் தனக்கு ஏற்பட்ட சிக்கலை குறித்தும், தான் பாதிக்கப்படுவதைக் குறித்தும் மிகவும் புலம்புகிறாள். க.கை.பி., புதினத்தில்,

“அக்கா, இத்தோட விட்டுரலாம். உலகத்தோட எந்த மூலைக்குப் போனாலும் - சந்தேகம் நம்மளைத் துரத்தும்னு நினைக்கேன். கேலி - நம்மளை வலை போட்டுத் தேடும்னு நினைக்கேன் வேணாம்க்கா, தாலி வாங்கிக்கறதுதான் வாழ்க்கையிலே ரொம்ப உசத்தியான விஷயமா?”

(க.கை.பி., ப.121)

என்று தங்கை ராஜாத்தியும்,

“நீ வேறம்மா. . .என் தங்கச்சிங்கறதாலேயே ராஜாத்திக்குக் கல்யாணம் நடக்க மாட்டேங்குது. . . நிஜத்தைப் புரிஞ்சு எவன் என்னைக்கட்டிப்பான்?

எத்தனை குறையிருந்தாலும் ஆம்பளைங்க விலை போயிடுவாங்க. எத்தனை களங்கமிருந்தாலும் ஆம்பளைங்க ரெண்டு மூணு கல்யாணம்கூடப் பண்ணிப்பாங்க. இதை யோசிச்சா ஆம்பளையா இருக்கறது பெரிய ஜாக்பாட்னு தோணுது. . . பொண்ணுக்குத்தான் பிரச்சனை எல்லாம்.. ''(க.கை.பி., பக்.122-123)

என்று தீபாவும் பெண்ணுக்கு ஏற்படும் சிக்கல்கள் குறித்துப் புலம்புவதாக ஆசிரியர் பதிவு செய்துள்ளார்.

## ரகுவின் சந்தர்ப்பவாதம்

பெண்ணுக்கு இருக்கும் மனஉறுதி ஆணுக்கு இருப்பதில்லை. சூழ்நிலைக்கு அடிமையாகக்கூடிய பண்பு ஆணிடம் அதிகம் இருக்கிறது. 'சு.பி.வீ' புதினத்தில் இந்தியப் பண்பாட்டை விரும்பும் அமெரிக்கப் பெண்ணான ஜரீனைத் திருமணம் செய்கிறான். தனக்காக இந்தியாவில் காத்திருக்கும் முறைப்பெண் ஸ்ருதியை மறக்கிறான். ஸ்ருதி வேறு திருமணத்திற்கு உடன்படாததை அறிந்து ரகுவின் மனம் அவளின் மீது விருப்பம் கொள்கிறது. அவளைத் திருமணம் செய்யவும் முடிவு எடுக்கிறான்.

"ஐம் ஆல்ஸோ வெய்ட்டிங் டு மேரி யூ ஸ்ருதி. ஐ லவ் யூ ஸோ மச்'' (சு.பி.வீ. ப.51)

என்ற வரிகள் சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப மாறும் மனம் கொண்டவன் ரகு என்பதைப் படம் பிடித்துக் காட்டுகின்றன. தன் மனைவிக்கு உகந்த கணவனாகத் திகழ்வதில் ரகு தவறிவிட்டான்.

## ஆணாதிக்கம்

‘ஆணாதிக்கம்’ என்பது பெண்ணடிமைத்தனத்திற்குரிய காரணங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. ஆண், பெண்ணை அடிமைப்படுத்திவாழும் வாழ்க்கை ‘ஆணாதிக்கம்’ என்கின்றனர்.

குடும்பத்தில் ஆணின் மேலாதிக்கமும் பெண்ணின் கீழ்ப்படிதலும் நிலவுவதால்தான் குடும்பத்தில் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. ஆண்கள் குடும்பத் தலைவன் என்ற நிலையிலும், பொருளாதாரம், அரசியல், உடல் மற்றும் மனம் ஆகிய நிலைகளிலும் பெண்களின் மீது ஆதிக்கம் செலுத்துகின்றனர். பெண்களை அடிமைகளாக்குகின்றனர்.

இன்றைய சூழ்நிலையில் ஆணும் பெண்ணும் வேலைக்குச் சென்றால்தான் பொருளாதாரச் சிக்கலைச் சரிக்கட்ட முடியும். ஆண்களும் வேலைக்குப் போகும் பெண்களையே தேடித் திருமணம் செய்கின்றனர். பெண்கள் வேலைக்குச் செல்லும் இந்நிலையைப் போற்றுவோர் ஒரு பக்கம் இருக்க, பெண்கள் வேலைக்குச் சென்றால் ஆண்களுக்கு வேலை கிடைக்காது என்றும், குடும்பத்தைச் சரிவர நடத்திச் செல்ல முடியாது என்றும் கூறுவோர் இருக்கின்றனர். இதனை, ‘தகனம்’ புதினத்தில் பிணம் எரிக்கும் தொழில் செய்யும் சின்னப் பொண்ணுவை ‘கவுன்சிலர்’ குறைகூறுவதன்வழி ஆசிரியர் சுட்டிக்காட்டியுள்ளார்.

“ஆம்பளை பண்ணாலே பதறித் தூக்கிப் போடற வேலைய, பொம்பளை பண்ணுதான்னா - அவ ஆம்பளையே தான். பொஞ்சாதி பொம்பளையா இருக்கணும். ஆம்பளைக் கணக்கா இருந்தா சொகமாவா இருக்கும்? குடும்பம் நடத்தத் தோதுப்பட மாட்டாளுக. . .” (தகனம். ப.128) என்ற வரிகள் ஆணாதிக்க வெறியுணர்வை வெளிப்படுத்துகின்றன.

‘கதா’ புதினத்தில், குமாரின் வார்த்தைகள் ஒவ்வொன்றிலும் ஆணாதிக்க வெறி மேலோங்கி நிற்பதைக் காணமுடிகிறது.

“உறவு விட்டுப்போகக் கூடாதேன்னு அம்மா கேக்கச் சொல்லிச்சு. இருபத்தஞ்சாயிரத்துக்குக் குறையாம கையிலே தந்தா வர்ற தையிலே கல்யாணம் வச்சுக்கலாம். ஆனா. . . கல்யாணத்துக்கப்புறம் இந்தக் கூத்து, நாடகம், அவன், இவன்னு, நீலா கையைப் புடிச்சு ஒருத்தன் பேசப்படாது. பொங்கணும், திங்கணும், தூங்கணும். எனக்கு இதுக்குத்தான் பொண்டாட்டி இப்பவே சொல்லிட்டேன். . .”

(கதா.ப.12)

என்ற வரிகள் ஆணின் அதிகாரத்தை சித்திரித்துக்காட்டுகின்றன.

“எப்படித் தப்பிக்கறேன்னு பார்க்கலாம். உன்னைக் கல்யாணம் பண்ணி இந்த வீட்டைச் சீராய் எனக்கு வாங்கிக் காட்டறேன். மெட்ராஸில இப்படி ஒரு வீடுன்னால் சும்மாவா? அண்ணனுக்குப் பூரணியை மறுகல்யாணம் கட்டணும்னு அம்மா சொல்லிச்சு. உங்க குடும்பமே தப்பிக்க முடியாது. எல்லாத்தையும் நடத்திக் காட்டறோம். அப்பத்தான் தெரியும் அத்தை மகன் அருமை . . . ” (கதா. ப.15)

என்று குமாரின் அதிகாரத் தோற்றத்தை ஆசிரியர் படம்பிடித்துக் காட்டியுள்ளார்.

‘வே.ம’ புதினத்தில், “இவர் நோட்டு நோட்டாய்க் கரைப்பது நான் ரத்தம் சுண்டி உழைத்துச் சம்பாதிப்பது. தொண்டைத் தண்ணி வற்றப் பாடம் சொல்லிக் கொடுத்துத் தோளும் கையும் கழன்று போவது மாதிரி பரீட்சைத் தாளும் கட்டுரை நோட்டும் திருத்திச் சம்பாதிப்பது. தண்டமாய்ச் செலவழிப்பது என் சம்பாத்தியம். இதோ உடல் நோகாமல் பறக்கிறாரே

இந்த ஸ்கூட்டர் நான் வாங்கித் தந்த சீர்'' (வே.ம. பக்.54-55) என்னும் குமுறல், தான் சம்பாதிக்கும் பணத்தைத் தான் எடுத்துச் செலவு செய்வதற்குக்கூட உரிமை அற்றவளாய் இருப்பதை உணர்த்துகின்றது.

சரசுவதியின் தோழி ராணி தன் திருமணத்திற்குப் பிறகு பிறந்தவீட்டுச் சொத்துக்களை எல்லாம் மெதுவாய்ப் புகுந்த வீட்டில் கொடுத்துவிடுகிறாள். புகுந்தவீட்டார் சொத்துக்கள் முழுவதையும் சுரண்டியபின், அவளை வீட்டை விட்டு அடித்துத் துரத்திவிடுகின்றனர்.

'வே.ம' புதினத்தில் வரும் சரசுவதிக்கு இத்தகைய ஆணாதிக்கப் போக்குடைய கணவனால் உடலாலும், மனத்தாலும் உண்டாகும் துன்பத்தைக் காணமுடிகிறது.

'கட்டில் மனசு' புதினத்தில், சுந்தர் – காவேரி தம்பதியினர் மகிழ்ச்சியான இல்லற வாழ்க்கையைத் தொடங்குகின்றனர். காவேரிக்குத் திடீரென்று ஏற்பட்ட விபத்திற்குப் பின் சுந்தர் அடியோடு மாறிவிடுகிறான். அன்புடன் ஆதரிக்க வேண்டிய சமயத்தில் அவளை வெறுப்பதுடன் கொலை செய்யவும் துணிகிறான்.

"இனிமே உடம்பு தேறி, எழுந்து உக்கார்ந்து எழுதப் போறியா? என்ன? இந்த புஸ்தகம்லாம் எதுக்கு இடத்தை அடைச்சுட்டிருக்கு? உன்னோட சேத்து இதையும் கொளுத்தணும் அப்புறம்தான் இது வீடாயிருக்கும் . . ." (க.ம.ப.207) என்று ஆணாதிக்கத்தைக் காட்டுவதால் காவேரி பல சிக்கல்களுக்கு ஆட்படுகிறாள்.

கணவனைத் தவிர மற்ற ஆண்களுடன் பழகக் கூடாது என்று நினைக்கும் ஆண்வர்க்கம் தன்னுடைய ஆதிக்கத்தைப் பெண்களின் மீது செலுத்துவதால் குடும்பத்தில் சிக்கல்கள் ஏற்படுகின்றன. 'சி.சி.எ' புதினத்தில்

பிரபா தன் கணவனால் பல சிக்கல்களுக்கு ஆட்படுவதையும் அவனின் சந்தேகப் பார்வை அவளை வேதனைப்படுத்துவதையும் ஆசிரியர் எடுத்துக் காட்டியுள்ளார்.

“யார் அந்த ஆண்பிள்ளை? என்ன விதமான நட்பு? ஏன் இத்தனை ரூபாய்க்கு அள்ளி வாங்கிக் கொடுத்திருக்கிறான்? இத்தனை கொடுத்தவன் என்ன எதிர்பார்க்கிறான் கைமாறாய்? . . . ” (சி.சி.எ., ப.129)

பெண் ஆணின் உடைமைப் பொருளாக ஆணுக்கு அடங்கி நடக்கும் கட்டுப்பாடு உடையவளாகவும் ஆணினம் அளிக்கும் தண்டனையை மனம் உவந்து ஏற்றுக் கொள்பவளாகவும் இருப்பதால்தான் குடும்பத்தில் பல சிக்கல்கள் எழுகின்றன.

## பெண்களை இழிவுபடுத்துதல்

சமூகத்தில் ஆண்கள் பெண்களை இழிவுபடுத்துவதும், அடக்குமுறை செய்வதும், தடைகள் போடுவதும் என ஒரு பக்கம் இருக்க, பெண்ணே பெண்களை இழிவுபடுத்தலும் கொடுமைக்குட்படுத்தலுமாகிய செயல்களை, ஆ.பி., தன்னுடைய புதினங்களில் பதிவு செய்துள்ளார். இதனை, வி.நே. புதினத்தில், விஜயாவுடன் பணிபுரியும் பெண்ணான ராணி, விஜயாவைக் கடுமையான சொற்களால் பேசி மனத்தைக் காயப்படுத்துவதை,

“வந்திருந்த வாடிக்கையாளர்கள், விற்பனைப் பெண்கள் அத்தனை பேர் முன்னிலையிலும் ராணி கத்தினாள். கூட்டத்தின் நடுவில் நிற்க வைத்துத் துணியை உருவின மாதிரி துடித்துப் போனாள் விஜயா. நாரசாரமான பேச்சு. . . புருஷன், குழந்தைன்னு சேர்ந்து இருந்தா, ஒரு பொறுப்பு இருக்கும். குடும்பத்துக்குக் கஞ்சி ஊத்தணுமேன்னு அக்கறை இருக்கும். நீ தாலி அறுத்தவதானே? குடும்பம்னா என்னன்னு உனக்கென்ன

புரியும்? தனிக்கட்டைதானே இந்த வேலை இல்லேன்னா . . முன்னப் பின்ன ஏதாச்சும் தொழில் பண்ணிப்ப . . . அதான் பொறுப்பில்லாமல் பேசற . . . தட்டிக் கேட்க ஆளில்லாத தெனாவட்டு . .''

(வி.நே.பக்.29-30)

எந்தப் பக்கம் போனாலும் யாரோடு பேசினாலும், 'விதவை' தாலி அறுத்தவள், 'பொறுப்பில்லாதவள்', 'துக்கிரி' இப்படியெல்லாம் பேச்சுக் கேட்க வேண்டிய கொடுமை, (வி.நே.ப.34) என்றும், பெண்ணே பெண்ணை இழிவுபடுத்துதலும், இதே போன்று, 'க.கை.பி', 'வே.ம', 'சூ.வி.வை', 'தா.த.தா' ஆகிய புதினங்களின்வழி பெண்கள் இழிவுபடுத்தப்படுதலையும், சமூகத்தாரால், ஆண்களால் இழிவுபடுத்தப்படுவதையும் ஆசிரியர் எடுத்துக் காட்டுகிறார்.

## குடும்பத்தில் பெண்கள் நிலை

குடும்பச் சூழலின் அடிப்படையில் பெண்களுக்கு ஏற்படும் சிக்கல்களை இரண்டு விதமாகப் பிரிக்கலாம்.

1. குடும்பத்தாரால் இளம் பெண்களுக்கு ஏற்படும் சிக்கல்கள்.
2. குடும்பத்தாரால் திருமணம் ஆனவர்களுக்கு ஏற்படும் சிக்கல்கள்.

## இளம் பெண்களுக்கு ஏற்படும் சிக்கல்கள்

குடும்பத்தில் பெண்களை மிகுந்த கண்டிப்புடன் வளர்க்கிறார்கள். வயதுக்கு வருவதற்கு முன் அவளை ஓரளவு சுதந்திரமாகச் செயல்பட அனுமதிக்கும் சமுதாயம், அவள் வயதுக்கு வந்த பின்பு நிறைய கட்டுப்பாடுகளை விதிக்கின்றது. ஆ.பி.யின் புதினங்களில் இத்தகைய போக்குகள் காணப்படுகின்றன. 'கதாநாயகி' புதினத்தில்,

“பொட்டச்சிக்கு எதுக்குப் படிப்பு? என்ன இருந்தாலும் இன்னொருத்தன் வீட்டு அடுப்படிக்கு போறவதானே . . .?

பொங்கணும், திங்கணும், தூங்கணும் இதுக்குத்தான் பொண்டாட்டி . . நினைக்கையில் இப்போதும் சிரிப்பு வந்தது. . . ” (கதா.ப.20) என்று பெண் கல்வி

வழங்க மறுப்பதும், ‘வி.நே’ புதினத்தில், பொம்பளைங்க என்னத்துக்குடி படிக்கணும்? புருஷங்காரன் சம்பாதிக்கறான். பொம்பளைங்க பொங்கிப் போடணும். நா இல்லியா அது மாதிரி? ம்? . . . . தறுதலை. மூதேவி. அவங்க வந்துட்டுப் போற வரைக்கும் அங்க இங்க நகராதே. அவங்க கண்ணுல வந்து விழாதே. . . போ . . .”

பஜ்ஜி சுட்டுக் கொண்டிருந்த ஜல்லிக் கரண்டியால் விஜயாவின் முதுகில் ரெண்டு பளீரென வைத்தாள் அம்மா. (வி.நே. ப.16)

விஜயாவை அவளுடைய தாயே கொடுமைப்படுத்துவதை ஆசிரியர் பதிவு செய்துள்ளார். இதனைப் போன்று ‘சாருலதா’ புதினத்தில் ஏற்கனவே திருமணமாகி குழந்தை இல்லாமல் இருக்கும் பிரேம்குமாருக்கு ‘சாருவை’ மறுமணம் செய்துவைக்கத் துடிக்கும் சாருவின் தாயையும் ஆசிரியர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதனைப் போன்றே ‘வே.ம’, ‘சூர’, ‘சூ.வி.வை’ புதினங்களும் பெண்களது சிக்கல்களையே மையக் கருத்தாகக் கொண்டு அமைந்துள்ளன.

## கல்வியில் சுதந்திரம் இல்லாமை

ஒரு பெண் வயதுக்கு வந்தவுடன் அவளுக்குக் கல்வி மறுக்கப்படுவதையும் ஆ.பி.

‘தகனம்’, ‘கதாநாயகி’, ‘வி.நே’, ‘சூ.வி.வை’ ஆகிய புதினங்களின் வழி சுட்டிக்காட்டியுள்ளார்.

‘வி.நே’ புதினத்தில், அவசர அவசரமாகப் படிப்பை நிறுத்தி, என்ன ஏதென்று நிதானிப்பதற்குள் கல்யாண மேடையில் உட்கார்த்தி வைத்து, இழுத்து மூச்சை விடுவதற்குள் விபத்தில் புருஷன் என்று வந்தவனைப் பறிகொடுத்து, வெளிச்சமாயிருந்த உலகம், சட்டென இருட்டாகி, புழுக்கமாகி, வெளிச்சப் புள்ளியே இல்லாமல் இருட்டுக் கடலில் மூழ்கி, தத்தளித்துச் சுவாசிக்கும் காற்றுக்கும் தடுமாற வைத்தது யார்?

எல்லாம் - அப்பாவால் வந்தது
எல்லாம் - அம்மாவால் வந்தது (வி.நே.ப.11)

எனக் கல்வி உரிமை பறிக்கப்பட்டதுடன், விஜயா வாழ்க்கையையும், இழந்து தவிப்பதை ஆசிரியர் சித்திரித்துக் காட்டுகிறார்.

‘கதாநாயகி’ புதினத்தில், மூணு முடிச்சு வாங்கினப்புறம் அடுப்படிக்குள்ள முடங்கப் போறவளுக்கு காலேஜு எதுக்கு? ம் . . .? அதிகம் படிச்சுட்டோம்கற திமிர்ல புருஷங்காரனுக்கு அடங்காமத் திரியவா? பொட்டைக் கழுதைங்களை ரெண்டெழுத்துக் மேல படிக்க வைக்கக்கூடாது. கலெக்டரம்மா உத்தியோகமா தட்டு கெட்டுப் போகுது? அண்ணே, நா சொல்லிட்டே இருக்கேன். நீயும் கேட்டுக்க மாட்டேங்கறே . . .உம் பொண்ணும் காதில வாங்காம போறாளே?”

(கதா.ப.56)

என்ற வரிகள் வாயிலாகப் பெண்களுக்குக் கல்வி மறுக்கப்படும் நிலையை அறிய முடிகிறது.

## முதிர்கன்னிகளின் நிலை

வயது முதிர்ந்தும் ஏதோ ஒருசில காரணங்களால் மணமேடை ஏற முடியாத முதிர்கன்னியர் பலருள்ளனர்.

இன்றைய சூழ்நிலையில் வரதட்சணைக் கொடுமைகளுக்காகத் திருமணம் ஆகாமல் இருக்கும் முதிர்கன்னிகளின் நிலல மிகவும் இரங்கத்தக்கதாக உள்ளது. தமிழ்ச் சமுதாயத்தில் இன்று திருமணம் என்பது அதன் புனிதத் தன்மையை இழந்து, இழிவான வாணிகநிலைக்கு மாறிவிட்டது. வரதட்சணை முறை திருமண வாழ்வில் இடம் பெற்றதால் பல பெண்களின் வாழ்வு காட்டில் காய்ந்த நிலவாகப் பயனின்றி உள்ளது எனலாம். பெண்ணைப் பெற்றுவிட்டமைக்காகத் துயரக் கடலில் மூழ்கும் பெற்றோர்களின் நிலையையும், பெண்களின் நிலையையும் எழுத்தாளர்கள் அதைத் தம் படைப்புகளில் சுட்டிக் காட்டினர். 20 ஆம் நூற்றாண்டில்தான் திருமணத்தில் வரதட்சணை வழக்கம் பெருஞ்சிக்கலாக உருவானது எனலாம். ஆண்கள், பெண்களைத் திருமணம் செய்து கொள்ள வரதட்சணை கேட்கும் நிலையுள்ளது. இக்கருத்தை 'ராமர்களுக்கு இன்று ரத்தமில்லை' என்ற கவிதையில் வைரமுத்து,

> "மாலையிடமாட்டார்கள்
> ஆனால்
> எல்லா வாலிபரும்
> அவளைப்
> பெண்பார்ப்பது போல்தான்
> பார்க்கிறார்கள்
> இந்த
> வரதட்சணைவில்லை
> வளைப்பது யார்?[24]

என்று, முதிர்கன்னியர் நிலை மாறவேண்டுமானால் அவர்களுக்குத் திருமணம் நடைபெற வேண்டும். திருமணத்திற்குத் தடையாக இருக்கும் வரதட்சணை முற்றிலும் முறியடிக்கப்பட வேண்டும் என்பதை, தன் கவிதை வாயிலாக சமுதாயத்திடம் வினாக்கள் தொடுப்பதைக் காணமுடிகின்றது. முதிர் கன்னிகளாகப் பெண்கள் இருப்பதற்குக் காரணம் வரதட்சணைதான் எனலாம்.

திருமணத்தை எதிர்நோக்கி இருக்கும் இம்முதிர்கன்னியின் அவலத்தையும், ஆற்றாமையையும், ஏக்கத்தையும், உள்ளார்ந்த சோகத்தையும் முப்பத்தைந்து வயதை எட்டிய விஜயாவின் மூலம் 'சி.சி.எ' புதினத்தில் ஆ.பி. எடுத்துக்காட்டுகிறார்.

"நா எங்கே மாமி இதில பேச? இத்தனை வயசுக்கு முதிர்கன்னி தாலியே கிடைக்கல்ல. இல்லறம் பத்திப் பேசுணுமா? . . . ஹீம் . . . நான் வரம் வாங்கிட்டு வரல்ல மாமி . . . " (சி.சி.எ., ப.151) முதிர்கன்னிகளை மணக்க ஆண்கள் முன்வருவதும் கூட வரதட்சணையின் பொருட்டே என்பதையும் திருமணம் ஆகிய பின்னரும் இவர்களின் அவலநிலை மாறவில்லை என்பதையும் அறியலாம்.

'க.கை.பி' புதினத்தில், 'பணிபுரியும் பெண்கள் விடுதி'யில் தங்கி இருப்பவர்களில் பெரும்பாலோர் முதிர்கன்னியரே ஆவர், என்பதை "நீ குழந்தை நாங்கள்லாம் முதிர் கன்னிங்க" (க.கை.பி., ப.75) என்று கூற்று மூத்த முதிர்கன்னியான சாரதாவின் கூற்று வழி ஆசிரியர் உணர்த்துகிறார்.

சூ.வி. வை' புதினத்தில்,

"பெண்பார்க்கும் படலம் . . .

முதிர்கன்னிக்கு

வெட்கத்தின் விழுக்காடு

குறைந்து தானே இருக்கும்?

நாணத்தின் அடர்த்தி

சிதைந்து தானே பிறக்கும்?

இது வரைக்கும்

நூறு காட்சிப் படலம்

முடிந்து விட்ட அலட்சியம்

வார்த்தையில் எதிரொலித்தது

“வாழ்த்துக்கள் பானுமதி . . . ”

“எதற்கு சரஸ்வதி?”

அரைகுறை ஆடைகளில்

உடலழகைக்

கோடி கண்களுக்குப் படையலாக்கும்

அழகிப் போட்டிக்கும்

பெண்பார்க்கும் படலத்துக்கும்

வித்தியாச விகிதம்

குறைவுதான் சரஸ்வதி. . . .”

“ஆண் என்னும் பௌதீக உருவத்துக்கு

இத்தனை ராஜ உபசாரமா?
அராஜகத்தைத் தட்டிக் கேட்டால்
பெரிய அபசாரமா?
வரதட்சணை, சீர் செனத்தி
இன்னபிற வகையறாக்கள் என்று
பத்துலட்சத்துக்குக் குறையாமல்
பட்டியலை நீட்டுகிறார்கள்” (சூ.வி.வை. பக்.31-32)

“தங்கத்தின் எடையால்தான்

தாரம் ‘எனும் பதவியா?

எனில்

பெண்ணை ‘மனைவி யாக்குவது

தங்கம் தானா?

தங்கமான கணவனில்லையா?” (சூ.வி.வை. ப.66)

என்று வரதட்சணைக் கொடுமை, முதிர்கன்னிகளின் நிலை பற்றி கூறுகிறார். மனிதனை நேசிக்கும் மனங்கள் மட்டும் இருந்தால் வரதட்சணையை ஒழித்து விடலாம் என்பது ஆ.பி. எதிர்பார்ப்பாகும். திருமணத்தை எதிர்நோக்கி இருக்கும் முதிர்கன்னிகளையும், திருமணம் ஆகியும் முதிர் கன்னிகளாகவே இருக்கும் பெண்களின் நிலையையும் ஆசிரியர் படைத்துக் காட்டியுள்ளார்.

## திருமணமான பெண்களுக்கு ஏற்படும் சிக்கல்கள்

திருமணம் என்பது ஆணையும், பெண்ணையும் இணைக்கும் பாலமாகும். அவ்விணைப்பு, பெண்களுக்குத் துணையாகவும் அமைகின்றது. திருமணம் நெஞ்சிற்கு மகிழ்ச்சியையும், வாழ்க்கைக்கு நீண்ட உறவுகளையும் தரக்கூடிய ஒரு பிணைப்பாகும். அப்படிப்பட்ட திருமண வாழ்க்கையில் பெண்களுக்குக் கணவனால் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. கணவன் இறப்புக்குப் பிறகும் பெண்களுக்குப் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. அச்சிக்கல்கள் சில வேளைகளில் பெண்களின் அழிவுக்கும் காரணமாக அமைவதை அறிய முடிகின்றது.

## கணவன் - மனைவி உறவுச்சிக்கல்

பெரும்பாலும் ஆண்கள் பெண்களின் மீது ஆதிக்கமும், அதிகாரமும் செலுத்தவே விரும்புகின்றனர். இதனால் பெண்கள், தாம்

விரும்பியதைச் சொல்லவும் அஞ்சுகின்றனர். பல வேளைகளில் மனைவியை அடிக்கும் ஆண்கள், அவ்வாறு செய்வதற்குத் தங்களுக்கு உரிமை உள்ளதாக நினைக்கிறார்கள். மனைவியை அனைத்துச் செயல்களிலும் கட்டுப்படுத்துவது கணவனின் கடமை என்றும் எண்ணுகிறார்கள்.

'வே.ம', 'க.ம' ஆகிய புதினங்களின் வழி ஆசிரியர் கணவன் மனைவியின் உறவுநிலைகளை எடுத்துக்காட்டுகிறார்.

'வே.ம.' புதினத்தில்,

சரசுவதியின் கணவன் கதிர்வேலு, சரஸ்வதியை அவளுடைய ஆசிரியர் பணிக்காகவும், அவளிடம் இருக்கும், நகை, வீடு, பணம், சொத்துக்காகவும்தான் திருமணம் செய்து கொண்டதாக் கூறுகிறான். அவளைக் கதிர்வேலும், அவனுடைய அக்காவும் சேர்ந்து மிகுந்த கொடுமைக்கு உட்படுத்துகிறார்கள். திருமணமான நாளில் இருந்தே கதிர்வேலு - சரஸ்வதியின் கணவன் - மனைவி உறவில் விரிசல் காணப்படுவதை ஆசிரியர் பெண்ணியச் சிக்கலாக எடுத்துரைக்கிறார்.

"என்னைப் புடிச்சிருக்கா?"

". . . . . . "

"ம்?"

"என்ன சொல்லணும்னு எதிர்பார்க்கறே? பொய்யா? நிஜமா?"

"புருஷன் பொண்டாட்டிக்குள்ள எதுக்குப் பொய்? நிஜம்தான். . "

"புடிச்சி, எவனாவது உன்னைக் கட்டிப்பானா? முன்னாடி துருத்திட்டிருக்கிற பல்லு, மூடாத உதடு, கொட்டையான முன் நெத்தி, எலிவால் பின்னல், வழுக்கை மாதிரி முடி கொட்டின மண்டை, உழக்கு

மாதிரி உசரம், தட்டையானமாரு, இதெல்லாம் ஒரு ஆம்பளைக்குப் புடிக்கும்னு நினைக்கறியா?ம்?"

". . . . ."

"அழகுதான் உன்கிட்ட இல்ல. ஆனா பாங்க் பாலன்ஸ் நிறைய இருக்கே. புத்திசாலியா சம்பளத்தை நிறையவே சேர்த்து வச்சிருக்கே. . . . கல்லுக்கல்லா நகை. சொந்தமா வீடு. . . .இதைச்சும்மா விடுவானேன்னு வெறி எனக்கு. ஆம்பளை கிடைச்சாப் போறும்னு ஆதங்கம் உனக்கு. கணக்குப் போட்டேன். வளைச்சுப் போட்டேன் . . ." (வே.ம. பக்.8-9)

இவ்வாறு கணவன் - மனைவி உறவுச்சிக்கல் உரையாடல் வழி ஆ.பி. அமைத்துள்ளார்.

'க.ம.' புதினத்தில், காவேரி-சுந்தரம், இவர்களின் கணவன் மனைவி உறவு ஆரம்பத்தில் மகிழ்ச்சியாய் இருந்தது. திடீரென்று காவேரிக்கு விபத்து ஏற்பட்டு படுத்த படுக்கையாய் இருந்தபோது, காவேரியின் கணவன் சுந்தரம் அவளை விட்டு பிரிந்து ஜெயா என்ற வேறொரு பெண்ணை நாடிச்சென்றான். காவேரியை உடலளவிலும், மனதளவிலும் மிகுந்த துன்பத்திற்கு ஆளாக்கினான்.

"காவேரியின் உடம்பு சரியாயிருந்த காலத்தில் அவர் அனுபவித்துச் சுவைத்து ரசித்த உடம்பின் சகல அணுவும் நனையும்படிச் சிறுநீர்க் குளியல் செய்து வைத்தார்"(க.ம. ப.222) காவேரி படுத்த படுக்கையில் சிறுநீர் பலூனுக்குள் சிறுநீர் களித்தாள். அந்தச் சிறுநீர் பலூனைக் கழற்றி காவேரியின் உடம்பு முழுவதும் ஊற்றிக் கொடுமைப்படுத்தினான், என்று கணவன் - மனைவி உறவுச்சிக்கல் பற்றி குறிப்பிட்டுள்ளார்.

## கணவனால் ஏற்படும் சிக்கல்

'வே.ம' புதினத்தில் ஆசிரியை சரசுவதியின் கணவன் அவளை வருவாய் ஈட்டித்தரும் அடிமையாகத் தான் ஏற்றுக் கொண்டான். கணவனைச் சார்ந்து வாழும் மனைவியை மனித உயிரியாக எண்ணாமல் அ.்.றிணை உயிரியாகவே எண்ணினான்.

படித்த அடிமையாக விளங்கும் சரசுவதி கணவனிடம் அடியும் உதையும் வாங்கிக் கொண்டு அதைத் தடுக்கும் ஆற்றலின்றியும் அதிலிருந்து விடுபடவும் முடியாமல் தவிக்கிறாள்.

மனைவிக்கு, புகுந்த வீடே எல்லாம் என்று எண்ணும் கணவன்மார் இருப்பதால்தான் பெண்கள் பிறந்த வீட்டையே மறந்துவிட வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்படுகிறார்கள். தன்னைப் படிக்க வைத்து, ஆளாக்கி, வேலையில் அமர்த்திய பெற்றோர்க்குப் பொருளுதவி செய்யும் உரிமை பணி மகளிர்க்கு இல்லாமல் போய்விடுகிறது.

சரசுவதி தன் தாய்க்குப் பொருளுதவி செய்து உதவ வேண்டும் என்று எண்ணும் போது கணவனின் கண்டிப்பால் அந்த உரிமையை இழக்கிறாள். "இவங்களுக்கு ஆயிரக் கணக்குல பணம் சம்பாதிச்சு தர்றேன். அம்மாவுக்கு ஒத்தைப் பைசாகூடத்தர முடியல்ல" (வே.ம.ப.57) என்ற சரசுவதியின் கூற்று வழி அறியலாம்.

மனைவியைச் சார்பு நிலையிலேயே வைத்திருக்க விரும்பும் கணவன், அவள் கொண்டுவரும் ஊதியத்தை மட்டும் முழுமையாகப் பெற்றுக்கொள்கிறான். மேலும், அவளுக்குப் பொருளியல் உரிமை மட்டும் தர மறுக்கிறான்.

இம்மாதிரியான, கொடுமைக்காரக் கணவனிடம் மனைவி அவதியுறும் பட்சத்தில் அவனைத் திருத்த முயல வேண்டும். அவ்வாறு திருத்த முடியாத நிலையில் அவனை விட்டுப் பிரிய வேண்டும் என்று ஆசிரியர் அறிவுறுத்துகிறார்.

## கணவனின் கொடுஞ் சொற்கள்

கணவன் மனைவியிடம் அன்பாக இருக்க வேண்டும். ஒருவரையொருவர் நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும். இல்லையென்றால் இருவரிடையே சிக்கல்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. இருவருக்கும் விட்டுக் கொடுத்துப் போகும் மனப்பான்மை இருந்தால் குடும்பத்தில் கணவன் மனைவிக்கு இடையே சிக்கல் ஏற்படாது.

உடல்நலம் குன்றி இருக்கும் மனைவியிடம் மனம் விரும்பும் வகையில் ஆறுதலாகச் சில சொற்களைப் பேசாது மனம் புண்படும்படிக் கொடுஞ் சொற்களைப் பேசும் கணவன் இருக்கும் குடும்பத்தில் பெண்களுக்கு சிக்கல்கள் ஏற்படுகின்றன.

'க.ம.' புதினத்தில் காவேரி தன்னுடைய கணவனின் கொடுஞ் சொற்களைக் கேட்டு, மேலும் அவள் மனமும், உடலும் பாதிப்புக்கு உள்ளாவதைப் பின்வரும் கூற்றின் வழி ஆசிரியர் உணர்த்தியுள்ளார்.

“அட இங்க பாருடா. . .கரப்பான்பூச்சி கூடத் தைரியமா உன் மேல ஏறி இறங்குது கட்டின புருஷன் எனக்குத்தான் இந்தக் கொடுப்பினை இல்லாம போச்சு அடடா. . . நெஞ்சு, கழுத்து, வாய், கன்னம்னு நல்லா ஓடுதே. குறு குறுக்கல்லியா? அருவருப்பா இல்லியா? நாத்தமடிக்கல்லியா? ஓ. . . ஓ. . .நான் ஒரு மடையன் உனக்குத்தான் சொரணையே

கெடையாதே. பத்துப்பேர் சேர்ந்து கிச்சுக்கிச்சு மூட்டினாக்கூட உணர்வே இல்லாமக் கெடப்பியே. . . "(க.ம. ப.202)

இதனைப்போன்று 'சி.சி.எ' புதினத்தில் பிரபா தன் கணவனின் இழிவான சொற்களைக் கேட்டு மிகவும் வேதனைக்கு உள்ளாகிறாள். இதனால் அவளின் மனம் மிகவும் வேதனை அடைவதை அறிய முடிகிறது.

## மக்கட்பேறு இன்மை

'மக்கட்பேறு' என்பது குடும்ப விருத்திக்குரிய ஒரு செயல்மட்டும் அன்று. அது ஒரு சமுதாயப் பொதுச்செயலாகக் காணப்படுகிறது. ஆணுக்கும், பெண்ணுக்கும் உரிய அடிப்படை வேறுபாடு தாய்மைதான் என்று எண்ணப்படுவதால், தாய்மையற்ற பெண்கள் மதிப்பிழந்தவர்களாகச் சமுதாயத்தில் கருதப்படுகிறார்கள். மேலும், 'மலடி' என்னும் பழிச்சொல்லுக்கு ஆளாகிறார்கள்.

குழந்தை பெறாதவர்களை ஒரு அபசகுணமாகவே கருதி வருகின்றனர். மேலும், அவர்கள் கை பட்டால் எதுவும் விளங்காது என்றும், அவர்களைப் பார்ப்பதே பெருந்தீட்டு என்றும் சிலர் மூடநம்பிக்கையுடன் ஒதுக்கி வைக்கின்றனர்.

'தா.த.தா' புதினத்தில் ராஜி 'மலடி' என்று வெறுக்கப்படுவதோடு, அவள் கண்பட்டதால் தனக்குப் பிறக்க இருந்த குழந்தை அழிந்து விட்டதாகவும் தோழியால் பழிக்கப்படுகிறாள். மேலும், ஊராரின் ஏச்சுக்கும், பேச்சுக்கும் ஆளாக்கப்படுகிறாள்.

"எங்களுக்கு முந்தியே தெரியும்.. . . .இந்த மலட்டு ஜென்மத்தோட பார்வை பட்டாலே குழந்தைங்க கருகி பட்டுப்போயிடுவாங்கன்னு. . .அதான். . . எங்க புள்ளைங்களோட பக்கத்திலே

கூட அவ நிழல் பட விடறதில்லை. . . தெரிஞ்சுக்கோ. . . .''

(தா.த.தா. ப.73)

என்று ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். மனிதஇன வளர்ச்சிக்குக் காரணமாக விளங்கும் மக்கட்பேறு, பெண்களை மிகவும் அடிமைப்படுத்தி உள்ளதாக 'வே.ம' புதினத்தில் சரசுவதி வழி ஆசிரியர் எடுத்துக்காட்டியுள்ளார்.

''மிருகத்தனமான புருஷனோட குழந்தையைச் சுமக்கிறது தற்கொலைன்னு நினைச்சேன். அதைவிட முகம் தெரியாத யாரோ ஒருத்தரோட கருவைச் சுமக்கிறது புண்ணியம்னு தோணுச்சு''. (வே.ம. ப.99)

என்றவாறு, சரசுவதி சமுதாய வளர்ச்சியினாலும் மருத்துவ வளர்ச்சியின் செயல்பாட்டினாலும் செயற்கைக் கருத்தரிப்பு வழி கருவைத் தத்தெடுத்துக் கொண்டாள். சரசுவதி இவ்வாறு முடிவு எடுப்பதற்குக் காரணமே ஆணாதிக்கப் போக்குதான் என்றும் இம்மாதிரியான செயல்கள் பெண்ணியச் சிந்தனைக்கு வழி கோலுகிறது என்றும் ஆசிரியர் கூறுகிறார். மேலும், 'சூ.வி.வை' புதினத்தில்,

''திருமணமாகி
ஐந்து வருடமாய்க்
குழந்தைக் கனவைக்
கர்ப்பமாய்ச் சுமக்கிறேன்
மலட்டுக் கனவுகள்
மகரந்த மொட்டுக்கள் இல்லாத
வளர்சிதைக் கனவுகள் . . .
மாதா மாதம் எதிர்பார்ப்பு
புதிர்சேர்ப்பு

குலவிருத்தி ஆகாமல்

புகுந்த வீட்டுமனங்கள்

விலகி விட்டன

மகிழ்ச்சிகள் இளகிவிட்டன

தினம் தினம் எங்களுக்குள்

வல்லடி வாக்குவாதம்

உறவுக்குள் நிம்மதி சேதம் . . .''(சூ.வி.வை. பக்.28-29)

என்றும்,

''மணாளனுக்கெல்லாம்

மறுமணம் செய்துவிட்டால்

மழலை பிறந்திடுமா?

மனைவி இரண்டானால்

மாஜிக்கில் வளர்ந்திடுமா?

விதைக் கோளமாயிருந்தால்

சதைக் கோளாமாயிருந்தால்

உயிரூட்டம் இருந்திடுமா?

வாரிசுகள் பிறந்திடுமா?

பொறுத்தது போதுமென்று

கோபத்தில் பெருத்தாய் விஜயா''(சூ.வி.வை. ப.91)

என்றும், பெண்ணுக்குத் திருமணமான பின்பு குழந்தை இன்மையையும், அதனால் பெண்ணைக் குறை கூறி உறவினர் வெறுப்பதும், அதனைக் காரணமாகக் கூறி ஆணுக்கு மறுமணம் செய்வதும், மறுமணம் செய்து

விட்டால் மட்டும் குழந்தை பிறந்திடுமா? எனப் பெண் அதனை மறுப்பதும், பொங்கி எழும் சூழல் ஆண்வர்க்கத்தை அதிர்ச்சிக்கு உள்ளாக்கும்.

## மறுமணச் சிக்கல்

பெண்கள் ஒவ்வொருவர் வாழ்விலும் நிகழும் இனிய சடங்கு திருமணமாகும். ஆனாலும் அத்திருமணத்தால் வாழ்வினை இழந்தவர் பலர். உள்ளுக்குள் உணர்வு பந்தம் உடைந்தவர் பலர். இல்வாழ்வில் பல இன்னல்களை இயல்பாக ஏற்றவர் பலர். ‘சூ.வி.வை’ புதினத்தில், விஜயாவின் கணவன் ஆனந்தன் விஜயாவின் தங்கையை மறுமணம் செய்து கொள்வதாகக் கூறுகிறான். அதற்குக் காரணமாக விஜயாவுக்குக் குழந்தைப்பேறு இன்மையைக் கூறுகிறான்.

“ம். . . . ம்
இன்னும் நாலே மாதங்களில்
என் கணவர்
என் தங்கைக்கும்
கட்டிலைப் பங்கு வைக்கப்போகிறார்
இரு மனைவிகளோடு
தவணை முறைத் தாம்பத்யம். . .
காலையில் தான்
பேச்சுவார்த்தை முடிந்தது
திருமணத் தேதிக்குப்
பிள்ளையார் சுழி படிந்தது” (சூ.வி.வை. பக்.27-28)

‘கதாநாயகி’ புதினத்தில்,

“ஹாங். . . மாமா. . .இன்னொரு முக்கியமான விஷயம். அம்மா சொல்லியனுப்பினா. இன்னும் ஆறு மாசத்திலே மதினி வயத்திலே சுமக்கல்லேன்னா அண்ணனுக்கு ரெண்டாங் கல்யாணம்தானாம்’’ (கதா. ப.12)

என்ற வரிகள் மைதிலிக்குக் குழந்தை இன்னும் உண்டாகவில்லை என்றால் உடனே மறுமணம்தான் என்பது பெண்ணே குத்திக்காட்டுவதாகும்.

‘சாருலதா’ புதினத்தில் சிறந்த நடிகரான பிரேம்குமாரின் மனைவி காஞ்சனாவுக்குக் குழந்தை இல்லை. இதையே காரணமாகக் கொண்டு, காஞ்சனாவே தன்னுடைய கணவனுக்குச் சாருவை மறுமணம் முடித்து வைக்கப் போராடுவதைப் படம் பிடித்துக்காட்டுகிறார்.

‘மறுமணம்’ செய்யப் போகும் விதவைப் பெண்ணுக்கும் விருப்பம் இருக்க வேண்டும். விரும்பாதவளை வற்புறுத்தலும் கூடாது என்று ஆசிரியர். ‘வி.நே’ புதினத்தில் விஜயா வழி எடுத்துக்காட்டியுள்ளார்.

விஜயாவின் பெற்றோர் தம் மகள் விதவை என்று அபச்சாரமாக ஒதுக்கப்படும் நிலையைவிட மறுமணம் செய்து கொள்வது பரவாயில்லை என்று எண்ணி, திருமணத்திற்கு ஏற்பாடு செய்கின்றனர். இரண்டு குழந்தைகளுக்குத் தகப்பனாக இருக்கும் ஆணுக்கு, செலவில்லாமல் பெண்ணைத் தள்ளிவிடுவதில் மகிழ்ச்சி கொள்கின்றனர்.

“எனக்கு இன்னொரு கல்யாணம் வேண்டாம் . . . நான் இன்னொரு நரகத்துக்குத் தயாரா இல்ல. . . ’’ (வி.நே. ப.68)

என்று விஜயா கூறுகிறாள்.

‘மறுமணம்’ பற்றிய செய்தியை ஆசிரியர், ஆண்கள் இரண்டாம் திருமணம் செய்து கொள்ளக் காரணம், மகளைக் கவனிக்கவும், மகனைக்

கவனிக்கவும், பொங்கிப் போடவும் ஒருத்தி வேண்டும் என்பதே ஆகும். ஆனால், பெண்ணிற்கு மறுமணம் செய்யப்படுவது மட்டும் அவளுடைய உடல் பசிக்குத் தீனி போட என்று எண்ணி இருக்கும் சமுதாயத்தை வெறுக்கும் பாத்திரமாக விஜயாவை 'வி.நே' புதினத்தில் சித்திரித்துள்ளார்.

விதவைப் பெண்கள் மறுமணம் செய்து கொள்வது ஒரு காலத்தில் முழுமையாகத் தடை செய்யப்பட்டு இருந்தது. ஆனால், தற்போது மறுமணம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்பதையும், மறுமணத்தை மறுக்கும் விதவைப் பெண்களும் காணப்படுகின்றனர் என்பதையும் ஆ.பி. தனது புதினத்தில் விஜயா வழி காட்டியிருப்பது பெண்ணியச் சிந்தனையின், வளர்ச்சியைக் காட்டுகிறது.

## மணவிலக்குச் சிக்கல்

ஆணும் பெண்ணும் வாழ்க்கை என்னும் பந்தத்தில் இணையும் நிலையே திருமணமாகும். இத்திருமண உறவில் இருவரும் ஒருவரையொருவர் புரிந்து கொண்டு மனித நேயத்தோடு, அன்போடு வாழ்ந்து வந்தால் வாழ்க்கை சிறப்பாக அமையும். இல்லையெனில், அவர்கள் வாழ்வு நரகம் என்னும் கொடிய சிறையில் அடைபட்டுவிடும். 'மணவிலக்கு' என்பது பெண்களைப் பொறுத்தவரை நினைத்துக் கூடப் பார்க்கமுடியாத ஒன்றாக இருந்தது. ஆனால், தற்போது மணமுறிவு (அல்லது) மணஉறவு விடுதலை என்னும் இந்நிலை சமூகத்தில் இயல்பான ஒன்றாகக் காணப்படுகின்றது. கணவன், மனைவி நிலை சில நேரங்களில் இணையாத கோடுகளாகிப் போகின்றன. 'வே.ம' புதினத்தில், அக்காவின் சொற்கேட்டு, மனைவியை அடித்து, வரதட்சணை கேட்டுத் துன்புறுத்தும் கணவனின் கொடுமையை பொறுக்க இயலாத சரசுவதி, அவனால் அவள் ஏமாற்றப்படுகின்ற நிலையை

நன்கு உணர்ந்து சட்டத்திற்கு விரோதமான அவர்களைத் தண்டனை பெறச் செய்து மணவிலக்குப் பெறுகிறாள்.

“தன்னை மிரட்டித்தான் கடிதத்தில் கதிர்வேல் கையெழுத்து வாங்கினான் என சரசுவதி சொன்னது புகுந்த வீட்டின் மிருகத்தனமான நடத்தை, காட்டுமிராண்டித்தனமான கொடுமைகள், ஒருவாய்ச் சோறு கூடப் போடாத ஈரமில்லாத மனம், அக்கா சொல்கேட்டு தாம்பத்ய வாழ்க்கை மறுத்து, மனைவியைத் துன்புறுத்தும் புருஷன், கட்டாயப்படுத்தி மணிக்கணக்காக டியூசன் எடுக்க வைத்தது, என எல்லாவற்றையும் வெளிப்படையாய்க் குடும்பக் கோர்ட்டில் புகார் கொடுத்து, வழக்கு நடந்து சுலபமாய் விவாகரத்தும் முடிந்தாயிற்று. (வே.ம.ப.95) என்று சரஸ்வதி கூறுவதன் வாயிலாகவும், ‘க.ம’ புதினத்தில், உடல்நிலை சரியில்லாத மனைவியிடம் அனுசரணையாய் நடந்துகொள்ள இயலாத கணவனின் கொடுமைகள், அவனுடைய அநாகரிகமான பேச்சு, ஒழுங்கற்ற செயல் போன்றவற்றால் ஏற்படும் வருத்தத்தைத் தாங்க இயலாமல் வாழ்வில் எதிர்நீச்சல் போட தன்னால் இயலும் என எண்ணி,

“விவாகரத்துத் தாளோடு கிளம்பின வக்கீலுக்குப் புன்னகையைப் பதிலாய் அனுப்பிவிட்டு . . . ” (க.ம. ப.240) கணவனிடமிருந்து விலகும் முனைப்போடு செல்லும் தன்மையை காவேரி வழித் தெளிவுபடுத்தியுள்ளார்.

மணவாழ்க்கையில் கணவன் மனைவியிடையே ஒத்துப் போகாத பொழுது, முடிந்த வரையிலும் பொறுமையாக இருந்து, போராடிப் பார்த்து இனிமேல் தாங்க முடியாது என்ற நிலை ஏற்படும்போது கணவனை விட்டு மனைவி பிரிந்து சென்றுவிடுகிறாள் என்பது பெண்ணியச் சிந்தனையின் வெளிப்பாடாக அமைகிறது. பொதுவாக, மணவிலக்கிற்கான காரணங்கள் பல

கூறப்பட்டாலும் பெரும்பாலும் கணவனின் கொடுமையே முக்கிய காரணமாக அமைவதை ஆசிரியர் எடுத்துக் காட்டுகின்றார். பெண்களின் பெற்றோர் மணவிலக்குச் சிக்கலை ஏற்றுக் கொள்கின்றனர் என்பது பெண்ணியச் சிந்தனையின் வெளிப்பாடாகும் என்பதை, சரசுவதியின் தாயார் வழி ஆசிரியர் உணர்த்தியுள்ளார்.

## விதவைச் சிக்கல்

கணவன் இறந்துவிட்டால் பெண் 'விதவை' என்று அழைக்கப்படுகிறாள். இந்நிலை பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளில் முதன்மையான கொடுமையாகும். இந்த நிலையை உணர்ந்த பாவேந்தர் பாரதிதாசன்,

“கோரிக்கையற்றுக் கிடக்கு தண்ணே இங்கு
வேரில் பழுத்த பலா”[25]

என்று கைம்பெண்களின் துன்ப நிலையை எடுத்துக்கூறியுள்ளார்.

“விதவைக் கொடுமை பெண்ணினத்தை ஒடுக்கி வைக்கும் மற்றுமொரு அடிமைச் சங்கிலி”[26] என்று ஐ.ராஜ். சே.ச. குறிப்பிடுகிறார்.

“கணவனை இழந்த பெண்களுக்குச் சமூகம் அளிக்கும் கொடுமை, கணவனிழப்பைவிடக் கொடுமையானதாகும். இடையில் வந்து சென்ற கணவனுக்காகப் பிறந்த காலம் முதல் மேற்கொண்ட பழக்கங்கள் பாழடிக்கப்படுகின்றன.”[27] என்று விதவைகளின் பரிதாப நிலையை கோ. சரோஜா கூறுகின்றார்.

ஒரு பெண் விதவையானால் உண்டாகும் சமுதாயச் சிக்கல்களையும், அவளுக்குச் சமுதாயம் இழைக்கும் கொடுமைகளையும் ஆசிரியர் சுட்டிக்காட்டுகிறார். “கணவன் இறந்தாலும் 'தாலி அறுத்தவள்'

என்ற பட்டப் பெயருடன் விதவை என்ற பயங்கர நிலைக்குப் பெண் தள்ளப்படுகிறாள். ‘அறுதாலி’ என்று கணவன் இயற்கை மரணம் எய்தும் போதும் மனைவி மேல் பழி போடப்படுகிறது.”[28] என்று கணேசலிங்கம் கூறுகிறார்.

குடும்ப அமைப்பில் விதவைப் பெண்களின் சிக்கல்களுக்குக் காரணமாக இருப்பவர்கள் பெரும்பான்மையும் பெற்றோர்களே ஆவர் என்பதைப் பின்வருமாறு ஆசிரியர் தெளிவுபடுத்தியுள்ளார். ‘வி.நே’ புதினத்தில், “பதினெட்டு வயசுக்குள்ளேயே தாலி வாங்கி, தாலி அறுத்து, பட்ட மரமா நிக்க வச்சுட்டிங்க . . . படிப்பை முறிச்சுப் போட்டுப் பறக்க விடாம பண்ணீட்டிங்க . . . சந்தோஷமாச் சிரிச்சால் தப்பாப்படுது. ஜாலியாப் பேசினா அனர்த்தப்படுது. நார்மலா இருந்தாக்கூட நம்பிக்கைத் துரோகியா நினைக்கறாங்க. எப்பவுமே அந்த ஆளோட நினைவைச் சிலுவையாச் சுமந்துகிட்டு, சுயபச்சாபத்தோடவே இருக்கணும்னு வச்சுட்டிங்களேம்மா. . . ” (வி.நே., ப.25) என்ற விஜயாவின் கூற்று வழி ஆசிரியர் விளக்கியுள்ளார்.

மேலும், விதவை, தாலி அறுத்தவள், மூதேவி, பொறுப்பில்லாதவள், துக்கிரி என்றெல்லாம் கணவனை இழந்த பெண் அழைக்கப்படுவதை ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். மற்றும், சமுதாயத்தில் அவள் ஒரு போகப் பொருளாகப் பார்க்கப்படும் நிலையையும் உணர்த்தியுள்ளார். ஒரு பெண் தன் கணவனை இழந்தால் அவளுக்குச் சமுதாயம் கொடுக்கும் பட்டம் என்ன என்று ஆசிரியர் சிந்திக்க வைக்கிறார்.

குடும்பத்திலும், சமூகத்திலும் தனக்கு விடுதலை இல்லை என்பதை உணர்ந்த விஜயா தன்னம்பிக்கையோடு வீட்டைவிட்டு

வெளியேறுகிறாள். இச்சிந்தனைகளின் வெளிப்பாட்டைப் பெண்ணுக்கான தீர்வாக 'வி.நே' புதினத்தில் ஆசிரியர் புலப்படுத்துகிறார்.

'உ.ஆ.' புதினத்தில் விதவைகள் வீட்டைவிட்டு வெளியே வரத்தடை இருந்திருக்கிறது என்பதை ஆசிரியர் பின்வருமாறு உணர்த்தியுள்ளார். "அப்பா போனப்புறம் வீட்டு வாசலைக்கூடத் தாண்டறதில்லை அவங்க . . . அந்த வீட்டுக்குள்ள தான் அவங்க உசிரு போணும்னு தவம்பண்ற மாதிரி இருக்காங்க."

(உ.ஆ., ப.146)

என்று மகள் அன்னபூரணியின் கூற்று வாயிலாக விதவையான தாயின் நிலை சித்திரிக்கப்படுகிறது. விதவையாக வாழ்வது என்பது சமுதாயத்தில் பெரிய போராட்டமாக அமைவதை ஆசிரியர் பல புதினங்களில் விளக்கியுள்ளார்.

## விதவைப் பெண் அலுவலர் சிக்கல்

விதவைக் கோலம் பூண்டு இருக்கும் பெண்களின் நிலை மிகவும் பரிதாபத்திற்குரிய ஒன்றாகும். வேலைக்குச் செல்லும் விதவைப் பெண்கள் அவர்களின் பணியைச் செய்வதோடு மட்டுமில்லாமல், அவர்களுடைய வாழ்வில் ஏற்பட்ட கசப்பான நிகழ்ச்சிகளை மறக்கவும் முயல்கின்றனர். பெற்றோர்களாலும், ஆண்வாடிக்கையாளர்களாலும், மேற்பார்வையாளர்களாலும் விதவைப் பெண்ணான விஜயா 'வி.நே' புதினத்தில் படும் தொல்லைகள் அதிகம்.

வயிற்றுப் பிழைப்பிற்காகத் துணிக்கடைக்கு வேலைக்கு வந்த விஜயாவை ஆண் வாடிக்கையாளர்கள் போகப் பொருளாகவும், விளம்பரப் பொருளாகவும் நினைத்து பேச்சாலும், பார்வையாலும் கிண்டல் செய்கின்றனர்.

“உங்க ஓய்.ஃ.போட அளவு சொல்லுங்க சார் . . .அளவு என்னன்னு தெரியல்லியே . . . சுமாரா உங்களோடது மாதிரிதான் உங்க அளவு என்ன மேடம் . . .” (வி.நே., ப.3)

மேற்பார்வையாளரின் கேலிக்கும், கிண்டலுக்கும், குத்தல் பேச்சுக்கும் விஜயா ஆளாகிறாள் என்பதை ஆசிரியர் பின்வருமாறு எடுத்துக் காட்டியுள்ளார். “ஹாங் . . . ஒரு விஷயம் ஞாபகம் வச்சுக்கோ. உன்னோட கவலை, சோகம், வருத்தம் எதுவுமே வேலைல தெரியக் கூடாது. யூனிபார்ம் புடவைய பளிச்சின்னு கட்டிட்டு வரணும் பவுடர், பொட்டுன்னு குறையில்லாம வரணும். வெத்து நெத்தி, எண்ணெய் வழியற மூஞ்சின்னு அழுது வழியக்கூடாது . . . புரியுதா . . . ?”

(வி.நே., ப.10)

இவ்வாறு பணிபுரியும் விதவைப்பெண் போகப் பொருளாகவும், விளம்பரப் பொருளாகவும் கேலிப் பொருளாகவும், பணம் சம்பாதித்துக் கொடுக்கும் இயந்திரப் பொருளாகவும் மட்டுமே சமுதாயத்தில் மதிக்கப்படுகிறாள் என்பதை அறிய முடிகிறது.

பணிமகளிரது ஊதியம் ஒருசில சுயநலக்காரர்களான கணவர்களால் பறிக்கப்படாத போது அவ்விடத்தைப் பெற்றோர்கள் பிடித்துக்கொள்கின்றனர். பெற்றோர்கள் தம் மகளைப் பொருள் (பணம்) சம்பாதிக்கும் இயந்திரமாகவே கருதுகின்றனர். மகளுடைய ஊதியத்தில் வாழ்வினை நடத்துகின்றனர். அவளைச் சுரண்டி வாழும் பெற்றோர்கள் விதவை மகளான அவளை மாற்றுப் பார்வையோடு பார்க்கின்றனர். மேலும், அவளுக்குப் பொருளாதாரச் சுதந்திரமும் தர மறுக்கின்றனர். என்பதை,

“உன் செலவுக்கு நூறு ரூபாய் அதிகம்னு படுது. இனிமேலிருந்து அம்பது மட்டும் எடுத்துக்கோ. அப்படி என்ன செலவு வந்துடும் உனக்கு? ம்? கண்டதையும் வாங்கித் திங்காதே. . . .கன்னா பின்னான்னு புஸ்தகம் வாங்காத. . . சினிமாக்குப் போகாத. . . .வீட்டைவிட்டுப் போயி கடைக்குள்ள நுழை அங்கேருந்து நேராவீட்டுக்கு வா. . . ..ஃ.பிரண்டு கூப்பிட்டா ஹோட்டலுக்குப் போனேன். ஸ்வீட்டு சாப்பிட்டேன்னு வந்து சொல்லாத. முந்திய விடவும் இப்பத்தான் உன்னை அதிகமா காபந்து பண்ண வேண்டியிருக்கு. . . .” (வி.நே. ப.23)

என்ற விஜயாவின் தாயின் கூற்று புலப்படுகிறது. பணம் சம்பாதித்துத் தரும் மகளுக்குப் பொருளாதார உரிமையைப் பெற்றோர் தர மறுப்பது நியாயமான ஒன்றாகாது.

## அலுவல் சிக்கல்கள்

முன்பெல்லாம் பெண்கள் குடும்பம், குழந்தை என்று வேலைகள் பல செய்து இருந்தாலும், ஆண்களுக்கு இணையாகச் சம்பாதிக்கும் திறன் அற்றவர்களாகவே இருந்தனர். அதனால் அவர்களுக்கெனப் பொருளாதாரச் சுதந்திரமும் பெற முடியாதநிலை காணப்பட்டது. ‘பெண்’ என்பவள் குடும்பத்தைப் பொறுத்தவரை பணிவிடை செய்வதற்கும், பணிவுடன் பெரியவர்களை எதிர் கொள்வதற்கும் மட்டுமே பழக்கப்பட்டவள் என்ற நிலை இன்று மாறி இருக்கிறது. கல்வி வாய்ப்பினாலும், சமூக வளர்ச்சியின் காரணமாகவும் பெண்கள் இன்று பல வேலை வாய்ப்புகளைப் பெற்று உள்ளனர். அரசு அலுவலகங்களிலும், பொது நிறுவனங்களிலும் பெண்களின் பங்கு குறிப்பிட்ட அளவிற்கு உயர்ந்திருக்கிறது.

அலுவலகத்திற்குச் செல்லும் பெண்களின் வாழ்க்கை ஓர் இயந்திர வாழ்க்கையாவே மாறிவிடுகிற நிலையில் அவர்கள் பல சிக்கல்களைச் சந்திக்க வேண்டியுள்ளது.

## அலுவலகம் செல்லும் மகளிர் சந்திக்கும் சிக்கல்கள்

பெருகி வரும் விலைவாசிக்கு ஏற்பவும், பொருளாதாரச் சிக்கல்களுக்கு ஏற்பவும் குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு உறுப்பினர்களும் சம்பாதிப்பது என்பது இன்றியமையாத ஒன்றாகிவிட்டது. மகளிர் அலுவல் மேற்கொள்வது தவிர்க்க இயலாத ஒன்றாகிவிட்டது.

ஒரு குடும்பத்தில் பொருளாதாரப் பற்றாக்குறையை ஈடுசெய்பவளாக பெண் இருந்தால், ஆணாதிக்க சமுதாயம் வரையறுத்த எல்லைகளிலிருந்து விடுபட அவளுக்கு வாய்ப்பு உள்ளது எனலாம். வேலை பார்க்கும் பெண்கள் வீட்டிலும் வெளியிலும் சந்திக்கும் சிக்கல்கள் பல. அவர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள் அதிகரித்துக் கொண்டே போகின்றன. பெண்களுக்குச் சமூகத்தில் அங்கீகாரம் கிடைக்கவில்லை என்றாலும் பல்வேறு வகையான சிக்கல்களை அனுபவிக்க வேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள்.

வேலைக்குப் போகும் பெண்கள் வாழ்க்கையில் ஏற்படும் சிக்கல்கள், சமையல், குழந்தை வளர்ப்பு, வீட்டில் ஆற்ற வேண்டிய பிற கடமைகள் போன்ற அனைத்தையும் பொறுப்புடன் ஆற்றிவிட்டுப் பின்பு, வெளியுலகத்தில் மேற்கொள்ளும் பணியையும் செய்து முடிக்க வேண்டும். இந்நிலையில் அவர்கள் சந்திக்கும் பிரச்சனைகளும் வேலைப்பளுவும் மிகுதியேயாகும்.

வேலைக்குச் செல்லும் பெண்களுக்குக் குடும்பத்தில் ஏற்படும் சிக்கல்கள் பலவாகும். அவற்றுள், கணவன்-மனைவி உறவுநிலை, தாய்-மகள் உறவு நிலை ஆகியவற்றில் வெறுப்பும் இடைவெளியும் அதிகமாகிக் கொண்டே வருகின்றன. பணிபுரியும் பெண்களுக்கு வெளியுலகில் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. அலுவலகங்களில் வேலை செய்யும் பெண்களை ஆண்கள் பாலியல் கண்ணோட்டத்திலேயே பார்க்கின்றனர்.

அலுவலகப்பணி செய்யும் பெண்களின் நிலை மிகவும் பரிதாபத்திற்குரியது. நாளின் தொடக்கமே அவர்களுக்கு சிக்கலாகி விடுகின்றது. வீட்டில் செய்ய வேண்டிய வேலைகளை முடித்து விட்டுக் குறித்த நேரத்தில் அலுவலகம் புறப்படுவது என்பது அவர்களுக்குப் பெரும் போராட்டமாகவே ஆகி விடுகின்றது.

ஆசிரியப் பணி குடும்பத்திலுள்ள பெண்களுக்கு உதவியாக இருக்கும் என்பதை ஆசிரியர் உணர்ந்து ஆசிரியப்பணி, அலுவலகப் பணி என வகைப்படுத்தி, அதிலுள்ள சிக்கல்களைத் திறம்பட விளக்கியுள்ளார். வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு நேரிடும் சிக்கல்கள் ஆண்டாள் பிரியதர்ஷினியின் ‘வேடிக்கை மனிதர்கள்’, ‘சிகரம் சிலந்திக்கும் எட்டும்’ ‘தாளம் தப்பிய தாலாட்டு’ ஆகிய புதினங்களில் காட்டப்படுகின்றன.

## அலுவல் செல்லக் காரணங்கள்

நடுத்தரவர்க்கக் குடும்பங்களின் பொருளாதாரத் தேவைகளை நிறைவு செய்யும்பொருட்டு இன்று வேலைக்குப் போகும் பெண்களின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டே வருகிறது. பொருளாதார அடிப்படையில் இன்று பெண்கள் வேலைக்குப் போக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது எனலாம். பெண்கள் அலுவலகங்களுக்குச் சென்று

பணிபுரிவதற்குச் சில பொதுவான காரணங்கள் உள்ளன. சில பெண்கள், கணவனை இழந்ததும் தன்னைத்தானே காத்துக்கொள்ளும் பொருட்டு அலுவல் மேற்கொள்கின்றனர். அடிப்படைத் தேவைகளைக்கூட நிறைவேற்ற முடியாத சூழலில், பெண்கள் வேலைக்குச் சென்றாக வேண்டிய கட்டாய நிலை ஏற்படுகிறது. சிலர் பொருளாதார நிலையை உயர்த்திக் கொள்வதற்காகவும் வேலைக்குச் செல்கின்றனர். சில பெண்கள் பொருள் நோக்கம் மட்டுமின்றி தவிர்க்க இயலாத பேரிழப்பை மறப்பதற்காகவும் மன அமைதிக்காகவும், குடும்பக் கவலையிலிருந்து விடுபடவும் வேலைக்குச் செல்கின்றனர்.

குடும்பச் சிக்கலைத் தீர்க்கும் பொருட்டும், வறுமை நிலையைப் போக்கும் பொருட்டும், பொருளாதார தேவையை நிறைவு செய்வதற்காகவும் பெண்கள் வேலைக்குச் செல்வதாக ஆசிரியர் காட்டுகிறார். இவ்வாறு அவர்கள் வேலைக்குச் செல்லும் நிலையில் பெற்றோர்களாலும், கணவன்மார்களாலும், மேலதிகாரிகளாலும் பிற ஆடவர்களாலும் சிக்கலை எதிர்கொள்கின்றனர்.

அலுவல் மகளிரின் சிக்கல்களாக, வறுமையினால் எழும் சிக்கல், பொருளாதாரத் தேவையால் எழும் சிக்கல், கணவனால் ஏற்படும் சிக்கல், நாத்தனாரால் ஏற்படும் சிக்கல், அலுவல் மகளிரின் தாய்மை நிலை, அவர்களின் இரட்டை வாழ்க்கை போன்றவற்றைப் பற்றி இனி காணலாம்.

## வறுமையைப் போக்குவதற்கு வேலைக்குச் செல்லல்

குடும்பத்தில் ஏற்படும் வறுமையைப் போக்குவதற்குப் பெண்கள் பணிபுரிய வேண்டிய அவசியம் இன்றைய நிலையில் ஏற்படுகிறது.

வறுமையின் காரணமாக விதவைப் பெண் விஜயா துணிக்கடைக்கு வேலைக்குச் செல்கிறாள் என்பதை ‘வி.நே’ கதையில் “வாழ்க்கையில் என்னதான் பிரச்சனை என்றாலும் மூணு வேளை வயிற்றுப்பசி மட்டும் தவறாமல் வந்து விடுகிறதே. . . சோகமும், கண்ணீரும், வருத்தமும், வேதனையும் பசிக்கு முன்னால் மண்டியிடுகிறதே. . . இவர்கள் தருகின்ற ஆயிரம், ஆயிரத்து நூறு, ரெண்டாயிரம் சம்பளம் சாதாரணமா என்ன? இதுவும் இல்லாமல் திண்டாடித் தெருவில் நிற்க முடியுமா?” (வி.நே., ப.6) என்றவாறு விஜயாவின் வறுமை நிலையை ஆசிரியர் காட்டுகிறார்.

இன்றைய விலைவாசி ஏற்றத்தின் காரணமாக பெண்கள் வேலைக்குச் செல்ல வேண்டிய கட்டாய நிலை ஏற்படுகிறது. பொருளாதாரத் தேவையின் பொருட்டுப் பணிமேற்கொள்ளும் பெண்களுக்கு வேலைப்பளு கூடுதலாகிறது. பெண்கள் அன்றாட வீட்டு வேலையை முடித்து வேலைக்குச் செல்வதற்குள் போதும் போதும் என்றாகி விடுகிறது. அதுவும் சொந்த வீடு இல்லாமல் வாடகை வீட்டில் குடியிருப்பவர்களின் நிலை மிகவும் துன்பமாக அமைகிறது என்பதை ‘உ.ஆ’ புதினத்தில் ஆசிரியை அன்னபூரணியின் வழி காட்டியுள்ளார்.

‘அவங்க முன்னாடி கேக்க வேணாம்தான். ஆனா எனக்கு முடை, அவசரம். . .ரெண்டு மாசம் வாடகை பாக்கி உடனே வையி. இல்ல வீட்டைக் காலி பண்ணிடு. . . .புருஷங்காரன் இன்னிக்குப் பணம் கொண்டு வருவான், நாளைக்கு கொண்டு வருவான்ற. . . ரெண்டு மாசமா சில்லரைகூடப் பெயரலையே. . . ”(உ.ஆ., ப.116)

‘உ.ஆ’ புதினத்தில் அரிசியும் மண்ணெண்ணையும் வாங்கும் ஆசிரியை அன்னபூரணி ஒரு நாள் அதை வாங்கும் பொருட்டு சிறிது நேரம்

அதிகமாகிவிட்டதால் பள்ளிக்குத் தாமதமாக வருகிறாள். அதன் காரணமாக அன்றைய நாள் சம்பளப் பிடித்தமும், பள்ளி முதல்வரிடம் பேச்சு வார்த்தைகளைக் கேட்க வேண்டிய நிலையும் அவளுக்கு ஏற்படுகிறது. அந்நிலையில் அன்னபூரணி "ஆசிரியைகள் அறையிலிருந்து பொருமத்தான் முடிந்ததே தவிர சம்பளப் பிடித்தம் பற்றிய கடிதத்தில் கையெழுத்திடுவதற்குப் பதிலாக ராஜினாமாக் கடிதம் எழுதி முகத்தில் வீசியிருக்கலாமே. . . ஏன் பண்ணவில்லை?" (உ.ஆ.ப.123) வேலை வேண்டாம் என்று எழுதிக்கொடுக்கும் எண்ணம் அவளுக்கு மனத்தில் இருந்தாலும் வறுமையை நினைக்கும்போது இயல்பான நிலையிலிருந்து அவளால் மீள முடியாத சூழலை அறிய முடிகிறது.

பெரும்பாலும், நடுத்தரக் குடும்பத்தில் உள்ள பெண்கள் பொருளாதாரப் பற்றாக்குறையை முன்வைத்தே வேலைக்குச் செல்கின்றனர் என்பதை 'தா.த.தா' புதினத்தில் டைப்பிஸ்ட் ஜெயாவை முன் வைத்து ஆசிரியர் படைத்துள்ளார். "ரெண்டு வாரத்திலே சுண்டுவுக்கு அஞ்சு வயசாகுது. ஸ்கூலிலே வேற சேர்க்கணும். . . அந்த எக்ஸ்ட்ரா செலவையெல்லாம் சரி கட்டணும்னு இன்னிலேர்ந்து ஒரு வாரம் நானும் அவரும் ஓவர் டைம் செய்யப் போறோம். கொஞ்சம் ரூபாய் அதிகமா வரும். ஆனா. . . ராத்திரி வீடு திரும்ப இன்னும் அதிகமாய் லேட்டாகும்..." (தா.த.தா., ப.43). இவ்வாறாக, பெண்கள் ஆண்களுக்கு இணையாகப் பல உலக அனுபவங்களைப் பெறுகின்றனர் என்பது வளர்ச்சி குறித்த நிலையே ஆகும். ஆனால் அவர்களுக்கு அதனால் ஏற்படும் சிக்கல்கள் பல பாதிப்புகளை உண்டாக்குகின்றன என்பதை ஆசிரியர் சுட்டிக்காட்டியுள்ளதை அறியமுடிகிறது.

## தலைமுறை இடைவெளி

பாலியல் பிறழ்வு, தன் முனைப்பு இவற்றுக்கு அடுத்த நிலையில் குடும்பச் சிக்கலை உருவாக்குவது தலைமுறை இடைவெளியாகும். இந்தத் தலைமுறை இடைவெளி என்பது வாழ்வியல் மாற்றங்களை (Changes in life style) ஏற்கத் தயங்கும் பழமைவாதிகளுக்கும், புதுமைகளை ஏற்கும் புதுமை விரும்பிகளுக்கும் இடையே தோன்றும் வாழ்வியல் சிக்கலாகும். இவற்றை,

"முந்திய தலைமுறை மனிதர்களிலிருந்து மாறுபட்டு வாழ விரும்பும் இந்தத் தலைமுறை மனிதர்களுக்கும், அவர்களுக்கும் நடுவே தலைமுறை இடைவெளிப் பிரச்சினைகள் (generation gap problems) ஏற்படுகின்றன."[29] என்று நா. பார்த்தசாரதி கூறுகிறார்.

"என்னமோடிம்மா, எங்க காலத்துல நாலு மரப்பாச்சி இருக்கும். பசங்களுக்கு கோலியும், கில்லி தாண்டும் இருக்கும் அதை வச்சு சமத்தா வெளாடுவோம். இப்பப்பாரேன் தொடாம பட்டன் அமுக்கினாலே அங்க கார் ஓடுது பளிச்பளிச்சுன்னு லைட்டு, 'சொய்ங்'குன்னு ஹார்ன் வேற. . . யம்மாடி. . .(சி.சி.எ., பக்.128-129)

அந்தக் காலத்தில் குழந்தைகள் வைத்துக் கொண்டு விளையாடும் பொருட்களைப் பற்றியும், இந்தக் காலத்தில் குழந்தைகள் வைத்திருக்கும் பொருட்களைப் பற்றியும், இரண்டிற்கும் ஏற்பட்ட தலைமுறை இடைவெளியைப் பற்றியும் ஆசிரியர் 'சி.சி.எ' புதினத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## நாத்தனாரால் ஏற்படும் சிக்கல்

மாமியார் இல்லாத வீட்டிலும் நாத்தனாரால் பெண்களுக்குச் சிக்கல்கள் ஏற்படுகின்றன. இந்நிலையில் கணவனாலும், நாத்தனாராலும் துன்பம் அனுபவிக்கும் பெண்களுக்கு இரட்டிப்பான வலி ஏற்படுகிறது.

'வே.ம' புதினத்தில் ஆசிரியை சரசுவதி, ஒட்டடக்குச்சி போன்ற ஒல்லியான உடலும், கறுப்பு நிறமும், அழகற்றவளாகவும், திருமணம் ஆகாத முதிர் கன்னியாகவும் காணப்பட்டதால் புகுந்த வீட்டார் பொருளின் பொருட்டே அவளை திருமணம் செய்து கொண்டனர். வேலைக்குச் செல்லும் பணி மகளான சரசுவதிக்குக் கணவனாலும், நாத்தனாராலும் வீட்டில்தான் நிம்மதியான வாழ்க்கை இல்லையென்றால், பணியிடத்திலாவது நிம்மதியைப் பெறலாம் என்று நினைத்தவிடத்து, அங்கேயும் கூடவே நாத்தனார் பாதுகாவலாக வரும் நிலையில் சரசுவதி நிம்மதியற்ற வாழ்க்கையில் சுழன்று கொண்டு இருக்கிறாள் என்பதை உணர முடிகிறது.

சரசுவதியின் தோழி சரளாவிற்கு வளைகாப்பு. அதற்குப் போக வேண்டும் என்றும், எல்லோரையும் போல ஏதாவது அன்பளிப்புத் தொகை கொடுக்க வேண்டும் என்ற ஓர் ஆசை சரசுவதிக்கும் இருந்தது. பணம் தன்னிடம் இல்லாததால் நாத்தனாரிடம் கேட்க, அவள் பணத்தேவைக்கான காரணம் என்னவெனக் கேட்டு, அதற்கு சரசுவதி தகுதியில்லாதவள் என்று வார்த்தைகளால் துன்பப்படுத்துகிறாள். "அடி ஆத்தி, அஞ்சி ரூபாவா? அ. . .ஞ். . .சு ரூபாங்கறது எவ்வளவு பெரிசுன்னு தெரியுமா? வாய் கூசாம கேக்கறியே பாதகத்தி, பணத்தோட அருமை தெரியதறதில்லை உனக்கு, ஆமா எதுக்கு அவ்வளவு ரூபா. . .? தன்கையில வளையல் அடுக்கற யோக்கியதை இல்லாதவ ஏன் மத்தவங்களுக்கு அடுக்கணும்? (வே.ம. ப.53)

இங்கு பொருளாதாரச் சுதந்திரமும் நாத்தனரால் சரசுவதிக்குக் கிடைக்கவில்லை என்பதை அறியமுடிகிறது. மேலும், பெற்றோர்களுக்கும் பொருளுதவி செய்ய சுதந்திரம் அற்றவளாகவே புகுந்த வீட்டாரால் நடத்தப்படுகிறாள். பணி மகளிர்க்குக் கணவனால் சிக்கல்கள் ஏற்படுவது ஒரு புறம் இருக்க, பெண்களே பெண்களுக்கு விளைவிக்கும் கொடுமை மற்றொருபுறம் இருக்க, பணி வாழ்க்கை ஒரு போராட்டமாகவே அமைந்துவிடுகிறது என்பதைக் காணமுடிகிறது.

## எதிர்பார்ப்புகளும் ஏமாற்றங்களும்

'கட்டில் மனசு' புதினத்தில் பேராசிரியை காவேரி திடீர் விபத்தின் காரணமாகப் பக்கவாத நோயினால் பாதிக்கப்பட்டு இருக்கும் நிலையில் கணவன் பேணாதவிடத்து, பணிப்பெண் லெட்சுமி அவளைக் கவனித்துக் கொள்கிறாள்.

காவேரியை அவளுடைய கணவன் புறக்கணிப்பதற்குக் காரணம் அவளுக்கு முன்பு போல உடல் நிலை இல்லாததாலும், குழந்தை இல்லாத காரணமுமே என்பதை உணர்ந்தாள். அதை நிறைவு செய்வதன் பொருட்டு ஜெயா என்ற பெண்ணுடன் தொடர்பு வைத்திருக்கிறான் என்பதையும் அறிந்து காவேரி பெரிதும் மனத்தளவி பாதிக்கப்படுகிறாள்.

காவேரியின் இயலாத நிலையைக் கண்ட கணவன் அவளுக்குப் பல கொடுமைகளைச் செய்கிறான். அநாகரிகமான பேச்சுக்கள், செயல்கள், ஏச்சுக்கள் இவற்றால் ஏற்படும் உள்ள வருத்தத்தைத் தாங்க முடியாத நிலையில் காவேரி, இதிலிருந்து விடுபட வேண்டுமானால் வாழ்வில் எதிர் நீச்சல் போட தன்னால் இயல வேண்டும். அதற்கு, தான் முன்பு போல கல்லூரிக்குச் செல்ல வேண்டும். மாணவர்களுக்கு பாடம் சொல்லித்தர

வேண்டும். நிறையப் புத்தகங்கள் எழுத வேண்டும். குறிப்பாகக் கவிதை எழுத வேண்டும். நிறைவேறாத ஆசைகளை நினைத்துத் தன்னை ஆறுதல்படுத்திக் கொள்ளவாவது. "நடமாடவேண்டும், எழுத வேண்டும், கவியரங்கத்தில் பங்கேற்க வேண்டும். கருத்தரங்கில் பேச வேண்டும். . . என்று டாக்டர் சொன்னது போல் தனக்குத் தானே ஆட்டோ சஜஷன் செய்து கொண்டாள் காவேரி'' (கட்டில் மனசு. ப.212)

கணவனிடம் இருந்து ஆறுதல் வார்த்தை ஏதும் கிடைக்காத நிலையில் எதிர்பார்ப்புகளாலும், அதனால் ஏற்படும் ஏமாற்றங்களையும் எண்ணி மனத்தால் பெரிதும் பாதிப்புக்குள்ளாகிறாள் என்பதை ஆசிரியர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## அலுவல் மகளிரின் தாய்மை நிலை

நடுத்தரக் குடும்பத்தில் உள்ள பெண்கள் பொருளாதாரக் குறையை நிறைவு செய்வதற்காக வேலைக்குப் போகும்போது தன் குழந்தையைச் சரியான முறையில் கவனிக்க முடியாத நிலையில் இருக்கின்றனர் என்பதை 'தா.த.தா' புதினத்தில் பணிமகள் ஜெயா தன் குழந்தையை அலுவலுக்கு இடையில் கவனிக்க முடியாத நிலையைப் பின்வருமாறு எடுத்துரைக்கிறார்.

"ஆயா சாயங்காலம் போனப்புறம் சுண்டுவை இங்கு வச்சுக் கவனிச்சிக்கிறியா. . . இன்னும் ஒரு வாரத்திற்கு மட்டும். . . ப்ளிஸ். . .உனக்கு கஷ்டமாயிருக்கும்னா வேண்டா. . . (தா.த.தா.ப.43)

என குழந்தையிடம் அன்புகாட்டவும், குழந்தையை அரவணைக்கவும் நேரமில்லாத நிலையை நினைத்துப் புலம்புவதும், அதிகாலையில் எழுந்து தூங்கும், குழந்தையையும் எழுப்பி,

அக்குழந்தைக்குப் பல்தேய்த்து, குளிக்க வைத்து, சாப்பிட அடம்பிடிக்கும் குழந்தைக்கு உணவு ஊட்டி, ஆயாவிடம் ஒப்படைத்துவிட்டு, கணவனுக்கும் வேண்டிய பணிகளைச் செய்து விட்டு, தானும் அவசர அவசரமாகப் பணிக்குப் புறப்படும் ஜெயாவின் அவலநிலையை அறிய முடிகிறது.

குழந்தைக்கு வேண்டியதெல்லாம் அன்பும் அரவணைப்பும்தான். அது பெற்றோரிடத்துக் கிடைக்காத நிலையில் அக்குழந்தையைக் கவனித்துக்கொள்ளும் நபரிடமே குழந்தை அனைத்தையும் முழுமையாகப் பெற்றுக் கொள்கிறது.

ஜெயாவின் நெருங்கிய தோழி ராஜி சுண்டுவை முழுநேரமும் கவனித்துக் கொள்கிறாள். அதனால் சுண்டு ராஜியையே அம்மா என்று சொல்கிறான். இங்கு வேலைக்குச் செல்லும் ஜெயா குழந்தையை சரியாகக் கவனித்துக் கொள்ள முடியாத அவல நிலையைக் காணமுடிகிறது.

### பணிபுரியும் மகளிரின் இரட்டை வாழ்க்கை

வீட்டிலும், அலுவலகத்திலும் பணிபுரியும் மகளிர்க்கு வாழ்க்கையில் இன்பமற்ற ஒரு நிலையே ஏற்படுகிறது. இரட்டை வாழ்க்கையைக் கடக்கும் போது அவர்களுக்கு ஓய்வு என்பதே இல்லாமல் போய்விடுகிறது.

இரண்டு பணிகளைச் சுமக்கும் மகளிர் அப்பணிகளைத் தாங்க மாட்டாத நிலையில் உடலும் உள்ளமும் சோர்ந்து போகின்றனர். அதாவது உடல் உழைப்போடு மன உளைச்சலுக்கும் ஆளாகின்றனர். ‘தா.த.தா’ புதினத்தில் ஜெயா டைப்பிஸ்டாக வேலைபார்க்கும் நிலையில்,

“நாள் முழுசும் டம்டபடப்டப என்று டைப் அடித்துவிட்டு தோள் வலியோடு . . .உடல் வலியோடு . . . வீடு வர எட்டாகி விடும்.

அம்மாடியோவ் . . இந்த மாதிரி டைப்பிஸ்டா லோல்பட்டு நூறு வயசு வாழ என்னால முடியாதுப்பா. . எப்போடா சாவோம்னு இருக்கு. . . .'' (தா.த.தா. பக்.30-33)

என்று தன்னையே வெறுத்து வாழ்வில் நிம்மதியற்ற நிலையை அடைகின்றாள் என்பதை உணரமுடிகிறது.

பணிமகளிர் மனைவியாகிப் புகுந்த வீட்டிற்குப் போகும் நிலையில் ஓய்வு இல்லாது உழைக்க வேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். 'வே.ம' புதினத்தில் மாலைநேரத்தில் பணி முடிந்து வரும் சரசுவதியை வீட்டு வேலைகளைச் செய்யும்படி ஆணையிடும் கணவனும், நாத்தனாரும் பணத்தாசையின் காரணமாகக் கூடுதல் வேலையாக அதிக நேரம் டியூசன் எடுக்கச் சொல்லி ஓய்வில்லாத உழைப்பைக் கொடுக்கிறார்கள்.

''டியூசனுக்குப் பல சமயங்களில் உடம்பு ஒத்துழைக்காது. ஓய்வு எடுத்துக்கோயென். ப்ளீஸ். . . .என்று கெஞ்சும் கதறும். . .ம்ஹீம் முடியாது. வகுப்பு எடுக்க வேண்டும். ஏதாவதொரு குழந்தை நின்று விட்டால்கூட இவளுக்குத் தான் அர்ச்சனை.'' (வே.ம., ப.44)

இம்மாதிரியான தன்னுடைய அடிமை வாழ்க்கையை நினைத்துப் பார்க்கும் போது, சம்பளக் கவரும், டியூசன் பணமும்தான் அவளுடைய அடையாளம் என்பதை உணர்கிறாள்.

பணிபுரியும் மகளிர் இருபணிகளைச் செய்யும் நிலையில் முழுவதுமாக இயந்திரமாகவே மாறுகின்றனர். இந்நிலை மாற, குடும்பப் பணிகளை மறுபங்கீடு செய்ய முயலவேண்டும் என்பதை ஆசிரியர் அறிவுறுத்துகிறார்.

**பணிபுரியும் மகளிர் இல்வாழ்க்கையில் ஒடுக்கப்படுவதை கேள்விக்குட்படுத்தல்**

"பாரம்பரியக் குடும்ப அமைப்பில் பெண்களைப் பொறுத்தவரையில் வீட்டிலும் வேலை செய்து, வெளியிலும் வேலை செய்து அதிக சுமைக்கு ஆளாகித் தனிமைப்படுத்தப்படுகிறார்கள். என்றும் இக்குடும்ப அமைப்பில் தீவிரமான சில மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும்"[30].

என்றும் சமதர்மப் பெண்ணியவாதிகள் எடுத்துரைக்கின்றனர். அவ்வகையில் ஆ.பி.யின் 'சின்னவள்' புதினம் சான்றாக அமைகிறது. கதையில் வரும் ராதிகா இல்லறத்தில் இருந்து கொண்டு, அலுவலகத்தில் பணிபுரிந்து இரட்டைச் சுமைகளுக்கு ஆளாகின்றாள். கணவனின் அதிகாரத்திற்கும், குடும்பப் பொறுப்பில் காட்டும் மெத்தனப் போக்கிற்கும், இலக்காகும்போது அவள் வீறு கொண்டு எதிர்க்கின்றாள். அவர்களது அடக்குமுறையினைத் துணிச்சலோடு கேள்விக்குட்படுத்துகிறாள். அதனை,

"மருமகள் மாடாய் உழைத்துச் சம்பாதிக்க. . . மகளை மகாராணியாய்க் கவனித்துக் கொள்கிறாரே. . . .பல்லால் உதட்டைக் கடித்துச் சோகத்தைத் தொண்டைக் குழிக்குள் தள்ளினாள் ராதிகா. . . ."

"அடிமை நாயா உங்களுக்கு வேலை செய்தேன் எனக்கு பிரதி உபகாரமா குழந்தைகளை நீங்களே கவனிச்சிருக்கலாம். ப்ச்! பண்ணிலியே. . . எப்பப்பாரு வேதனை வாக்குவாதம் விதண்டாவாதம். . . வாழ்க்கையே ஒரு கொடுக்கல் வாங்கல்தான் அதைப் புரிஞ்சுக்கல்லியே நீங்க. . . பூஜை மாடத்துக்குப் போனாள் ராதிகா. தாலிக் கொடியைக் கழற்றினாள். மஞ்சள் கயிற்றில் திருமாங்கல்யத்தைக் கோர்த்துக் கொண்டாள்.

“வர்றேன். . .”

“ஒற்றை வார்த்தையை உதிர்த்துவிட்டுக் கிளம்பினாள்.”

(சின்.பக்.75-76)

என்று வரும் பகுதி தெளிவுறுத்தும்.

## பெற்றோர்களால் ஏற்படும் சிக்கல்கள்

ஒரு பெண் திருமண வயதை அடைந்து விட்டால், அக்குடும்பத்தில் அவளொரு சுமையாகவே நினைக்கப்படுகிறாள். பெண் திருமண வயதடையும்போது பெற்றோர் பெருத்த கவலைக்கு உள்ளாகின்றனர். அவளுக்குத் திருமணமானால்தான் தங்களின் சுமை குறைவதாகக் கருதுகின்றனர். ‘வி.நே’ புதினத்தில் பெற்றோர்களால் விஜயாவிற்கு எவ்வாறு சிக்கல்கள் ஏற்படுகின்றன என்பதை ஆசிரியர் பல கோணங்களில் எடுத்துக்காட்டியுள்ளதைக் காணமுடிகிறது.

“நான் பதினாறு வயசுல உன்னைப் பெத்துட்டேன்டி. இதுக்கு மேல தள்ளிப்போட்டு வயித்துல நெருப்பைக் கட்டிக்க என்னால முடியாது”(வி.நே. ப.11)

என தீபாவின் அம்மா, மடியில் நெருப்பைக் கட்டிக் கொண்டிருப்பது போல பழமொழி எல்லாம் சொல்லப்படுகின்ற நிலைக்குப் பெண் ஆளாகிறாள் என்பதை அறிய முடிகின்றது.

பெண்ணைப் பெற்றவர்களுக்குத் தம் மகளுக்குத் திருமணம் செய்து வைப்பது ஒரு பொறுப்பாக கடமையாக அமைந்துவிட்ட நிலையை,

“அனாவசியக் கனவு காணாம இரு. . .இவனைப் புடிக்கவே எந்தாலி அறுந்துடுச்சு தெரியுமா? . . . ” (வி.நே.ப.12)

என்று சொன்ன தந்தையின் பொறுப்பான நிலையை ஆசிரியர் எடுத்துக்காட்டியுள்ளார்.

பெற்றோர்கள் தம் பெண்ணுக்குத் திருமணம் எப்படியாவது முடிந்தால் சரி என்று விஜயாவின் விருப்பம் அறியாமல் சம்மதிக்க வைத்ததால் திருமணம் முடிந்த சில நாட்களிலேயே அவள் விதவைக் கோலம் அடைந்து சிக்கலுக்கு ஆளாக்கப்படுகிறாள்.

தன் பெண்ணின் திருமணம் நடந்தாலே போதுமென்று நினைக்கும் பெற்றோர்கள் இருக்கும்வரை, விஜயா போன்ற பெண்கள் பல சிக்கல்களுக்கு ஆளாவார்கள் என்பதை அறிய முடிகிறது.

## கைவிடப்பட்ட மகளிர்

பெண்களை ஏமாற்றி போகப் பொருள்களாகப் பயன்படுத்திவிட்டுச் செல்லும் ஆண் சமூகத்தால் பெண்கள் பல சிக்கல்களுக்கு ஆளாகிறார்கள்.

‘சூரசம்ஹாரம்’ புதினத்தில் தேன்மொழியை அழகேசன் திருமணம் செய்துகொள்வதாக ஏமாற்றி, அவளைப் போகப் பொருளாகப் பயன்படுத்தி, வயிற்றில் ஒரு குழந்தையையும் கொடுத்து விடுகிறான். இதனால் தேன்மொழி அனாதையாகத் தெருவில் நிற்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. தேன்மொழி பல சிக்கல்களுக்கு ஆளாகிறாள் என்பதை இங்கு உணர முடிகிறது.

இதே போன்று பார்வதியம்மாள் பண்ணையார் மகனால் கைவிடப்பட்ட நிலையைப் பின்வரும் கூற்றின் மூலம் அறிய முடிகிறது.

மேற்பார்வை பார்க்க வந்த பண்ணையார் மகனின் கழுகுப்பார்வை என் மேல்பட்டு. . . அவனின் பனிக்கட்டிப் பேச்சு என்

நெஞ்சில் பட்டு கொழு கொம்பாய் வாழ்க்கை ஆதாரத்துக்குத் தவித்துக் கொண்டிருந்த என் மனசைப் புரிந்து, அவனின் கை என்மீது பட்டு. . .அவனின் வாரிசைச் சுமந்த வயிற்றோடு நீதி கேட்கப் போனேனே. . .எத்தனை பேர் காறித்துப்பினார்கள் . . .''(சூரசம்ஹாரம் ப.84)

## பெண்களின் மனப்போராட்டம்

'கதா' புதினத்தில் குறிப்பிடத்தக்க பாத்திரமாக அமைந்திருப்பவள் மைதிலி. வரதட்சணைக் கொடுமையின் காரணமாகப் புகுந்த வீட்டிலிருந்து விரட்டப்பட்டு, தன் தங்கை நீலாயதாட்சியுடன் வாழ வேண்டிய இக்கட்டான நிலைக்கு ஆளாகிறாள். தங்கைக்குச் சுமையாக இருக்கக்கூடாது என்பதில் உறுதியாக இருக்கிறாள். படிப்பு இருந்திருந்தால் அவள் தனியாகத் தொழில் செய்தோ (அல்லது) பணிக்குச் சென்றோ ஊதியம் ஈட்டியிருக்க இயலும். தனித்துவாழ இயலாமல் தவிக்கிறாள். புகுந்த வீட்டிலும் இருக்க இயலாமல் தங்கைக்குச் சுமையாகவும் இருக்க விரும்பாத மைதிலி நீண்ட மனப்போராட்டத்திற்குப் பிறகு என்ன நடந்தாலும் சரி புகுந்த வீட்டிலேயே இருப்பது என்ற நிலைக்கு வருகிறாள். இரவிலே ஊருக்குச் செல்லும் மைதிலியை நோக்கி,

"இப்பவே கிளம்பணுமா? நாளைக்குக் காலைல போகலாமேக்கா?'' (கதா.ப.16)

என்று நீலாயதாட்சி கூறுவது ஆழ்ந்த சிந்தனையைத் தூண்டுகிறது.

"இல்ல நீலா, இதோட வண்டி ஏறிட்டேன்னால் உனக்கு ஒரு வேளைச் சாப்பாடு மிச்சமாகும். ஒருவாய்க் காப்பி மிச்சமாகும். உன்னைச் சுரண்டி உன் உழைப்பைச் சுரண்டி என் வாழ்க்கை நகருதேங்கற நரகவேதனை எனக்குக் குறையும். அப்பாவைப் பார்த்துக்க. நீலா நல்லாப்

படிக்கணும். பூரணி, என்னை மாதிரி படிக்காமக் கொள்ளாம, கல்யாணம்கற தளையைப் பூட்டிக்காதே. புதை மணல்லே மூச்சுத் திணறி செத்துப் போயிடுவே. நல்லாப்படி. . . நிறையப்படி. . . புருஷனை விடவும் படிப்புதான் நிரந்தரத் துணை. சாஸ்வதமான உறவு மறந்துடாதே...''(கதா. ப.82)

என்று மைதிலி பேசுகிறாள். கல்வியைப் பெரிதாக நினைத்தாலும், கல்வியைக் கற்காத காரணத்தால், கணவன் வீட்டிற்குச் செல்லும் மைதிலி தனித்து வாழ நினைத்தும் வாழவியலாத அவலம், ஏற்படுகிறது.

இதைவிடவும் இக்கட்டான இன்னொரு நிலை மைதிலிக்கு ஏற்படுகிறது. நீலாயதாட்சி குமாரைத் திருமணம் செய்து கொண்டால்தான் மைதிலியுடன் குடும்பம் நடத்தவியலும் என்று அவளுடைய கணவன் கூறுகிறான். இரண்டில் ஒன்றை மைதிலி முடிவு செய்தாக வேண்டும். நீலாயதாட்சியைத் திருமணம் செய்து கொடுப்பதா? (அல்லது) கணவனிடமிருந்து விலகுவதா? என்ற மைதிலியின் மனப்போராட்டத்தை ஆசிரியர் குறிப்பாக உணர்த்தியுள்ளார்.

இதனைப்போன்றே ‘க.கை.பி’, ‘சூ.வி.வை’, ‘சாரு’, ‘வே.ம’, ‘க.ம’ போன்ற புதினங்களில் பெண்களின் மனப்போராட்டத்தை ஆசிரியர் மிக அழகாக பதிவுசெய்துள்ளார்.

## பெண்ணியத்திற்கான தீர்வுகள்

18ஆம் நூற்றாண்டில் தொடங்கிய பெண்ணிய வளர்ச்சிக்கான முறைகள் இருபத்தியோராம் நூற்றாண்டாகியும் முழுமையடைவதாக இல்லை. தமிழ்நாட்டில் மறுமலர்ச்சிக் காலகட்டத்தில் பாரதியார், பாரதிதாசன், திரு.வி.க. பெரியார், வேதநாயகம் பிள்ளை போன்றோர் பெண் சுதந்திரம் பற்றிப் பேசினர்.

## பெண் விடுதலை

பெண் விடுதலை என்பது மக்களின் சுதந்திர உணர்வைக் கூறுவதாய் அமையும். பெண்கள் தங்களுக்கு வாய்த்த கணவன் சரியில்லாதவனாக அமைந்தால் அவர்கள் வீட்டிற்குள்ளே முடங்கி கிடக்காமல் தங்களின் நல்வாழ்விற்காகத் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தி முன்னேற்றப்பாதையில் செயல்பட வேண்டும் என்று ஆ.பி. ‘கதா’, ‘வே.ம.’, ‘சூ.வி.வை’, ‘சி.சி.எ’, ‘வி.நே’ ஆகிய புதினங்கள் வழி உணர்த்துகிறார். ‘கதா’ புதினத்தில்,

“க்கும். . . .கல்யாணம் பண்ணிட்டு உறவை ஏற்படுத்திக்கலாம்னு புதுவியாக்கியானம் சொல்ல வேண்டியதுதான். உன்னை மாதிரி சூழ்நிலைக் கைதியா, அடிமையா வாழ எனக்கு முடியாது. இப்படியே தனி மரமாய் வேணா இருப்பேனே தவிர தூக்குக் கயிற்றைத் தாலிக் கயிறாய்ச் சுமக்கமாட்டேன்”.

“இங்க பாருங்க குமார். எங்கதங்கச்சி எங்கேயும் ஓடிப்போயிடமாட்டா. . அந்தக் கவலை உங்களுக்கு வேணாம். உங்களை மாதிரி காட்டுமிராண்டிக்குக் கழுத்தை நீட்டறதை விடவும் தற்கொலை பண்ணிக்கறது எவ்வளவோ தேவலாம்.” (கதா.பக்.13-14)

இவ்வரிகளின் வாயிலாக, பெண் தனக்கு விடுதலையை வேண்டி, வெளியில் பறக்க ஆயத்தமாகும் சமதருமப் பெண்ணியத்தை புகுத்தியுள்ளார் எனலாம்.

“சூ.வி.வை’ புதினத்தில்,

“ஆணுக்கொரு நீதி,

பெண்ணுக்கொரு நீதி

இதுதானே நம் சமூகநீதி. . .?"

"இம்மாதிரி

நிர்ப்பந்தம் தருகின்ற பந்தம்

எதுவும் எனக்குத் தேவையில்லை.

ஆணின் வாழ்க்கை

பௌதீகத்தாலும்

பெண்ணின் வாழ்க்கை

பொருளாதாரத்தாலும் நிர்ணயிக்கும்

நீண்ட கொடுமைக்கு

நான் துணைபோக மாட்டேன் அண்ணா. . . "

(சூ.வி.வை. பக்.67-68)

என்ற பானுமதி கூற்றுவாயிலாக ஆசிரியர் பெண் விடுதலையைப் பதிவாக்கியுள்ளார்.

## தொழில் துறையில் பெண்கள்

இன்று சமுதாயத்தின் அனைத்துத் தரப்பினரும் பெண் விடுதலையைக் கோருகின்றமையை அறிய முடிகின்றது. ஆண்கள் மட்டுமே கல்வி பயின்று தொழில் துறையில் ஈடுபட வேண்டும் என்ற நிலை ஒரு காலத்தில் இருந்து வந்தது.

'க.கை.பி', 'வே.ம', 'சூ.வி.வை', 'சி.சி.எ', 'சூர', 'வி.நே', 'தா.த.தா', 'தகனம்', 'கதா', 'சாருலதா', 'சின்னவள்', 'உ.ஆ', 'க.ம' என ஆ.பி. புதினங்கள் அனைத்திலும் வரக்கூடிய பெண்கள் அனைவருமே

ஏதாவது ஒரு தொழிலில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வதாகவே காட்டியுள்ளார்.

தா.த.தா. புதினத்தில் வரும் ஜெயா என்ற பெண் தட்டச்சுப் பணியாளராகச் செயல்படுகிறாள்.

'சூ.வி.வை' புதினத்தில், சரசுவதி பள்ளி ஆசிரியையாகவும், விஜயா பேராசிரியராகவும் செயல்படுகிறாள்.

'வி.நே.' புதினத்தில், 'விஜயா' துணிக்கடையில் பணிபுரிகிறாள்.

"குட்டக் குட்ட ஓரளவுக்குத்தான் குனிய முடியும் ஸார். . .வயித்துப் பொழைப்புக்காக வேலைக்கு வர்ற பொண்ணுங்களை யெல்லாம் சொடக்குப் போட்டுக் கூப்பிடலாம்னு நெனைக்காதீங்க. . . . இந்தாங்க பில் கவுண்டர்ல பணம் குடுத்திடுங்க. . .மெட்டீரியல் அங்க போயிடும். . . ." (வி.நே., ப.4) என்று கடைக்கு வரும் ஆண்களின் தவறான பார்வைக்கும், பேச்சுக்கும் கடுமையான வார்த்தைகளால் சாட்டையடி கொடுக்கிறாள் விஜயா.

'வே.ம.' 'உ..ஆ', 'க.ம' போன்ற புதினங்களில் வரும் பெண்பாத்திரமான, சரசுவதி, அன்னபூரணி, காவேரி போன்றோரும் பள்ளி, கல்லூரி ஆசிரியராகவே பணிபுரிகிறார்கள்.

இதன்வாயிலாக பெண்கள் தொழில் துறையில் ஈடுபடுவதை அறிய முடிகிறது.

## ஆணாதிக்க எதிர்ப்பு

ஆண்கள் தங்களை கட்டுப்படுத்தும்போது, அதைத் தகர்த்தெறிந்து விட்டுத் தங்கள் எதிர்காலத்தைத் தேடிச் செல்லும்

தீவிரவாதப் பெண்ணையும் ஆ.பி, ‘வே.ம’, ‘கதா’, ‘சூ.வி.வை’, ‘சூர’, ‘தகனம்’, ‘சாரு’, ‘சின்னவள்’ போன்ற புதினங்களில் காட்டியுள்ளார்.

‘சூ.வி.வை’ புதினம் முழுக்க முழுக்க ஆணாதிக்க எதிர்ப்புத் தன்மையும், புரட்சிப் பெண்ணாகவும், புதுமைப் பெண்ணாகவும், தீவிரவாதப் பெண்ணாகவும் கொண்டு ஆசிரியர் சித்திரித்துள்ளார்.

“கண்ணீர் முத்துக்களை
ஆணிண் பொருட்டு வீணாக்கதே.
“ஆண் என்பவன் ஆக்ஸிஜன் இல்லை
அவன் இல்லாமலும்
சுவாசிக்கலாம்,
வாழ்க்கையை வாசிக்கலாம்,
நிரூபித்துக்காட்டுவோம்.
“திருமணத்தில் சிக்காத
இருமணத் தோழிகள் நாம்,
ஒரே மனத்தோடு
பெண்ணுறவில் பிணைந்து
கண்ணுறக்கம் கொள்ளுகிறோம்
களிப்பினையே அள்ளுகிறோம். . .” (சூ.வி.வை. ப.121)

என்று பானுமதி, ஷ்யாமாவின் ஓரினச்சேர்க்கை வாயிலாக ஆ.பி. காட்டியுள்ள தீவிரவாதப் பெண்ணியத்தை அறிய முடிகிறது.

## புரட்சிப்பெண்களும் - புதுமைப்பெண்களும்

சமுதாய நம்பிக்கைகளைத் தகர்த்தெறியும் அதிநவீனப் பெண்ணையும் ஆ.பி. ‘வே.ம’, ‘கதா’, ‘சூ.வி.வை’, ‘சூர’, ‘தகனம்’, ‘க.ம’, ‘வி.நே’ போன்ற புதினங்களில் படைத்துள்ளார்.

‘சூ.வி.வை’ புதினத்தில்,

“வீரமும் ஞானமும் பெண்கட்கு

வேண்டுமென

பாரதிப் புலவன் பகிர்ந்தது மறந்தாயோ. . . ?

ஞானத் துணை கொள் பானு.

விஞ்ஞானத் துணை கொள்

கனவுகள் நனவாகும்

தாய்மை உணர்வுகள் நிஜமாகும். .. ” (சூ.வி.வை. ப.88)

“வருகின்ற நூற்றாண்டில்

வாழ்க்கை இவ்விதன் தான் பானு

நட்பின் அடுத்த நிலையில்

பெண்மைத் தாம்பத்யம்

அதுவே மென்மைத் தாம்பத்யம். . . .

“கல்லையும் புல்லையும்

கணவனாய்த் துதிக்காத

நனவுப் பெண்களின்

நிஜ தாம்பத்யம் இது. . . .”

“தந்தையும் தாயுமாகிப்

பெண்களே ‘தந்தாய்’ என ஆவர்

சகல உறவுமாய்

வியாபித்து நிற்கும்

தனிமைத் தாய்மைதான்

வருங்கால வரமாகும். . .

பெண்கள் இணைந்திடுதல்

தாம்பத்ய உறவாகும். . . . .”

தெளிவுச் சிந்தனையின்

உச்சக்கட்டத்தில்

உலாப் போனாள் பானுமதி. (சூ.வி.வை. பக்.118-120)

இவ்வாறு பாரதியின் கூற்றிற்கேற்ப ஆசிரியர் ஷ்யாமா, பானு, சரசுவதி போன்ற புதுமைப்பெண்களையும், புரட்சிப் பெண்களையும் படைத்துள்ளார்.

‘வே.ம’ புதினத்தில்,

“என் வாழ்க்கையில் இனி எந்த ஆணுக்கும் இடமில்லை. குழந்தை ஆணாய்ப் பிறந்தால் - மீசை மட்டும் ஆண்மையில்லை. மனிதாபிமானமும் அனுசரணையும்தான் ஆண்மைக்கு அடையாளம்னு சொல்லி வளர்ப்பேன். பெண் பிறந்தால் - ஆணுக்குப் பெண் அடிமையில்லேன்னு சொல்லி வளர்ப்பேன். கடைசி மூச்சு வரைக்கும் மனிதம் என் குழந்தையிடமிருந்து காணாமல் போயிடாமல் பாதுகாப்பேன். ஆணும் பெண்ணும் சமம்னு பெயரளவுக்குச் சொல்லாம, பெயரிலிருந்தே துவங்கி சமத்துவம் சொல்லுவேன்.” (வே.ம. பக்.100-101)

என்ற வரிகள், கணவனின் கடுமையான தொல்லைகளுக்கு உட்பட்டு, சிக்கிசி சிதைந்து போன சரசுவதி அதிலிருந்து மீண்டு அவனை விட்டு விலகி, செயற்கை கருவை சுமந்து கொண்டு கூறும் புரட்சிக் கூற்றாக இக்கருத்தை ஆசிரியர் பதிவு செய்துள்ளார்.

இயற்கையிலேயே மென்மைத் தன்மையுடைய பெண்டிர், வாழ்க்கைச் சிக்கலை எதிர்கொள்ளும் போது, அஞ்சா நெஞ்சினராய்ச்

செயல்படுதல் வேண்டும் என்பது இன்றைய காலச் சமுதாயத்தில் இன்றியமையாத ஒன்றாகும்.

“ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவிலோங்கி இவ்வையம் தழைக்குமாம்
பூணு நல்லறத் தோடிங்குப் பெண்ணுருப்
போந்து நிற்பது தாய் சிவ சக்தியாம்”[31]

என்று பாரதியார் குறிப்பிட்டுள்ளார்.

‘தகனம்’ புதினத்தில்,

சின்னப் பொண்ணுவின் தந்தை காணாமல் போனதிலிருந்து பொருளாதாரச் சிக்கலின் காரணமாகத் தானே வெட்டியான் தொழிலில் ஈடுபடுவதை,

“சின்னப் பொண்ணுக்குக் கஞ்சியூத்த ஆள் இல்ல. . . மயானத்தில் இறங்கிட்டா. . . .பொட்டப்புள்ளக்கி எம்புட்டு நெஞ்சுரம் பாரு. . . கடைசி ஊர்வலத்துலயே வரவிடாத பொம்புளைக. . .இன்னிக்கு பொணம் எரிக்குதுண்ணே. உனக்கு அந்த தைரியம் வேணுண்ணே. . . .” (தகனம். ப.26)

என்று சின்னப்பொண்ணுவின் தைரியத்தைப் பாராட்டி, சின்னப் பொண்ணு புதுமைத் தொழில் புரிவதாகவும், புதுமைப் பெண்ணாகவும், புரட்சிப் பெண்ணாகவும், ஆசிரியர் சித்திரித்துக்காட்டியுள்ளார்.

## பெண்ணியக் குரல்

தன் வாழ்க்கையைவிடவும் தங்கையின் வாழ்க்கையே முதன்மையானது என்ற மனப்போராட்டத்திருந்து விடுபடும் மைதிலியின் நிலையை.

“அட. . .நீ என்ன இப்படிப் புலம்பறே நீலா? நரகத்திலே இல்லாத வேதனைகள் கொடுமைகள். அடிதடிகள், சித்ரவதைகள்லாம் நான் எப்பவோ அனுபவிச்சாச்சு. புதுசா அனுபவிக்க இனிமே ஏதுமில்லை. என்னைப்பத்தி நீ கவலைப்படாதே. ஆனா கண்ணைத் திறந்துக்கிட்டே நீ புதை குழிலே விழுந்திடாதே. . . ஜாக்கிரதை, பச்சாதாபமும் கரிசனமும் உனக்கு எமனாயிடக் கூடாது பார்த்துக்கோ.” (கதாநாயகி. ப.82)

என்கிறாள் நீலா. அன்றாட வாழ்க்கையில், இந்தியப் பெண்கள் குடும்ப அமைப்பிற்கும், தாலிக்கும் முக்கியத்துவம் அளிப்பவர்கள். குடும்பம் கட்டுக்கோப்பாக இருக்க வேண்டும் என்பதற்காக எந்தத் தியாகத்தையும் செய்வார்கள். மைதிலி படிக்காதவள். கணவனையும் அவனுடைய குடும்பத்தையும் சார்ந்து வாழ வேண்டிய நிலையில் உள்ளவள். கணவனுடன் வாழ்ந்து தங்கையை அவளுடைய குடும்பத்தாரின் விருப்பப்படி குமாருக்கு மணமுடிப்பது முக்கியமா (அல்லது) நீலாவைக் காப்பாற்றத் தாலியைத் துறப்பது முக்கியமா என்ற நிலை ஏற்படும் போது நீலாவைக் காப்பாற்றுவதே என்ற முடிவை எடுக்கிறாள்.

“ப்சு. . . விடு நீலா. இப்பத்தான் - தூக்குக்கயிறிலேருந்து தப்பிச்சு வர்ற மாதிரி சுகமாயிருக்கு. சுதந்திரமா, மூச்சு விடமுடியுது இந்த நாய்ங்க தயவிலே வாழ வேண்டிய நிர்ப்பந்தத்தை அவங்களே இல்லேன்னு பண்ணிட்டாங்க. இனிமே நிம்மதி. கூலிவேலை செய்தாவது ஒரு வாய்க்கஞ்சி குடிச்சுக்கலாம். ஆனா - நீ பத்திரம். போ. . .போயிடு நீலா. நீ மேலே பறக்கணும். உன் விருப்பமான இணைப்பறவையோட மேலே பறக்கணும். இந்தச் சதிகாரக் கும்பலோட வலைல மாட்டிக்காதே. உறவுங்கற வலை விரிக்கிறாங்க. ஊரெல்லாம் இன்விடேஷன் அனுப்பியாச்சுன்னு வலை

விரிக்கிறாங்க. மூணு முடிச்சு போட ரொம்ப நேரமாயிடாது. ஆனா அது மாங்கல்யமா தூக்குக் கயிறான்னு அடிபட்டு அடிபட்டுக் கண்டுபிடிக்கறதுக்குள்ளே வாழ்நாள் முடிஞ்சு போயிடுது'' (கதாநாயகி. ப.83) என்று பேசும் மைதிலியிடம் பெண்ணியக் குரல் ஓங்கி ஒலிப்பதை உணர்ந்து கொள்ளலாம்.

குமாரின் மனப்போராட்டம் தாழ்வு மனப்பான்மையின் அடிப்படையில் அமைந்துள்ளது என்றால், மைதிலியின் மனப்போராட்டம் கணவனுடன் வாழ்வா? (அல்லது) தங்கைக்கு வாழ்வா? என்ற கேள்வியில் அமைந்துள்ளது.

வாழ்நாள் முழுவதும் வதங்கி விடாமல் சுதந்திரமாக வாழ நினைக்கும் பெண்ணினத்தைக் கதாநாயகி விரும்புகிறாள்.

### தாய்மைப் பண்பு

பெண்மை முழுமை அடைவது தாய்மையில்தான். தாய்மை சிறப்பிற்குரியது. அது தெய்வீகத் தன்மை உடையது. பிள்ளைகளைப் பெற்று பண்போடு உருவாக்கும் தாயின் பணி மேன்மையானதாகும். ''காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு'' என்பது போல ஒரு தாய் தன் குழந்தைகளின் நலனில் அக்கறை கொண்டிருப்பாள்.

'க.கை.பி' புதினத்தில்,

''நான் இருக்கேன் உனக்கு கவலைப்படாதே. . .''

தீபாவின் முகத்தைப் புடவை முந்தானையால் துடைத்தாள் அம்மா. இத்தனை வருஷமாய்ப் பொத்தி வைத்திருந்த அழுகையும், சோகமும் பீறிட்டுக் கிளம்பியது புரிந்தது தீபாவுக்கு.

அம்மாவின் கையை ஆதரவாய் அழுத்தினாள். அவளை மார்போடு சாய்த்து ஆதரவாய்த் தடவிக் கொடுத்தாள். அம்மா. . . என் அம்மா. . . இப்படி உன்னை இறுக்கிப் பிடிக்க வேண்டும். மார்பில் சாய வேண்டும். குழைய வேண்டும். இழைய வேண்டும் என்ற கனவெல்லாம் இப்போதுதான் நிறைவேறுகிறது. எனக்கு இந்த நிம்மதி போதும் தாயே. . . போதும். . . (க.கை.பி. ப.128)

இவ்வாறு தீபாவின் தாயிடத்து தாய்மைப் பண்பு வெளிப்பட்டு நிற்பதைக் காணமுடிகின்றது.

'தகனம்' புதினத்தில்,

ஏழ்மையான குடும்பத்தில் வாக்கப்பட்ட முனியம்மா கணவனுக்குநல்ல மனைவியாகவும், சின்னராசு, சம்பத்து, சுரேசு, ராணி இவர்களுக்கு சிறந்த தாயாகவும் விளங்கி சமுதாயத்தில் தாய் என்ற பெருமையைப் பெறுகின்றாள். கணவனுடன் சேர்ந்து தன் பிள்ளைகளின் வாழ்க்கைக்கு சிறந்த முறையில் அக்கறை காட்டுகின்றாள். வறுமையில் வாடும் தன் குடும்பத்தில் மகள் ராணி பருவம் அடைந்த மகிழ்ச்சியில் அவளுக்கு சடங்கு செய்ய வேண்டும் என நினைத்துக் கடன் வாங்கி சடங்கை முடிக்கும்போது சிறந்த தாயின் பெருமையைப் பெறுகின்றாள். தன் மூத்த மகன் சின்னராசு மேல் அக்கறை கொண்டு தீராத பகையில் இருக்கும் உறவுப்பெண்ணான சின்னப்பொண்ணு தன் மருமகளாக வர வேண்டும் என நினைக்கிறாள். சின்ன மகன் சுரேசு வெட்டியான் தொழில் செய்த போது ஏற்பட்ட மயக்க நிலையால் மூச்சுப் பேச்சு இல்லாமல் இருக்கும் மகனைப் பார்த்து ஒப்பாரி வைத்து அழுது புலம்புகின்றாள்.

“ஐயோ. . .எம்புள்ளக்கிப் பேச்சில்ல. . . .சிரிப்பில்ல. . .அம்மா ஆத்தான்னு குரல் இல்ல. . .

அள்ளி வச்ச மண்ணாட்டம்
அப்படியே கெடக்கானே
தள்ளி வச்ச கல்லாட்டம்
தடுமாறிக் கெடக்கானே.. . .

மாரிலடித்து அழுதாள். . . .சுரேசை இறுக்கிப் பிடித்து கன்னத்தில் முத்தி அழுதாள். கண்ணீரும் மூக்குச் சளியுமாய் முகத்திலிருந்து வழிய. . . ஏழ்மைத்தாயின் பாசத்துக்கு. . . வறுமைய வரையறை போடமுடியுமா? இவளின் வருத்தமோ அழுகையோ சுரேசுக்குப் புரியவேயில்லை.”

(தகனம். பக்.91-92)

வறுமைத்தாய்மைக்கு தடைபோட முடியாது. முனியம்மா ஒரு சிறந்த தாயாக மிளிர்கிறாள்.

‘சூ.வி.வை’ புதினத்தில்,

பெண் சிசுவைக் கொலை செய்யப் போகும்போதுகூட ஒரு தாயின் பதைப்பினை ஆசிரியர் சுட்டிக்காட்டுகையில்,

“பின்பக்கம் நகர்ந்தாள் சங்கரம்மா
பார்த்து ஜாக்கிரதை
குழந்தைக்கு வலிக்காம. . . .! !
தாய்மையின் மிச்சத்தில்
சோகத்தின் உச்சத்தில்
அம்மாவின் அக்கறையை
வாய்க்கரிசியாய் அனுப்பினாள்

ராமக்கா

பெண் பெற்ற தாய்மார்கள்

அழுதழுது சேர்த்த

கண்ணீரால்

தண்ணீர்த் தொட்டி தளும்பியது.'' (சூ.வி.பை. பக்.112-113)

செய்வதோ கொடுமையான பாவச் செயல். அதுவும் கொலைக் குற்றம். அத்தகைய தீமைச்செயலை புரியும் போதுகூடத் தாய்மை மிளிர்வதை ஆசிரியர் மிக அழகாகப் படம் பிடித்துக்காட்டியுள்ளார். நம் உடலும், உள்ளமும் மரணத்தின் விளிம்பிற்கே சென்று விடுகின்றன.

'தா.த.தா' புதினத்தில்,

ஜெயா வறுமை காரணமாக வேலையே குறிக்கோளாகச் செயல்படுவதுடன், குழந்தையைக் கவனிக்க முடியாத சூழ்நிலையில், குழந்தைமீது அன்பு செலுத்த, தான் தவறியதாக நினைத்து வருந்துகிறாள்.

"ஒரு வாரமாய் சுண்டுவோட நான் பேசவேயில்லியே. காலைலே நாங்க போறப்போ அவன் முழிக்காததும் . . .ராத்திரியிலே திரும்பி வர்றதுக்கு முன்னாடி அவன் தூங்கிடறதும். . .அடடா. . .ஆமா! ஒரு வார்த்தைக்கூட அவனோட பேசவேயில்லியே. . .ச்ச்சே. . . .பிள்ளை பாவம். . . தவிச்சுப் போயிருப்பானே என்ன பொம்பளை நான். . .?'' . . .தலையில் அடித்துக் கொண்டு – தவிப்புடன் ஓடி வந்து . . ."சுண்டு. . .சுண்டுக்கண்ணா. . எழுந்திரிடா'' (தா.த.தா. ப.52)

தாய்மை என்பது மறக்கமுடியாத ஒன்று. வறுமையிலும் தாய்மையை ஆசிரியர் மிக அழகாக சித்திரித்துக்காட்டியுள்ளார்.

## சின்னப் பொண்ணுவின் துணிச்சல்

அரசியல்வாதி ஒருவரின் மகனால் கற்பழித்துக் கொலை செய்யப்பட்ட ஒரு பெண்ணின் சடலத்தை, இருசப்பனைக்கொண்டு காவலர்களின் துணையுடன் எரிக்க வைத்து, அதை வெளியில் சொல்லாமல் இருக்க வேண்டி இருசபப்பனின் கைகால்களை உடைத்துப் போட்டுவிடுகின்றனர். இதனால் சினம் கொண்ட சின்னப்பொண்ணு மயான அலுவலர் மணிமாறன் என்பவரிடம் சென்று நியாயம் கேட்டு வாதிடுகிறாள்.

“பொம்பளப் புள்ளிங்களை இவனுங்க சொகத்துக்கு மோந்துப்புட்டு. . . பிரச்சனையாயிரக் கூடாதுன்னு எரிக்க வைக்கறதே இவனுங்களுக்கு பொழப்பாயி போயிருச்சு.. . . அந்தப் பொண்ணை எரிச்சு சாம்பளாக்கி இல்லாமல் பண்ணிப்புடலாம். ஆனா. . . மேலே ஒருத்தன் பாத்திட்டிருக்கானே. . . அவன் பார்வையிலிருந்து தப்பை மறைச்சுட முடியுமா? தப்பை மறைக்க தொனை போறத் தொழிலு இல்ல இது. ஒவ்வொரு பொணத்தை எரிக்க போவும் நா சாமிய வேண்டுதன். இந்தாளோட ஆத்மா நல்லபடியாச் சாந்தியடையனும்னுட்டு. . .” (தகனம். ப.49)

என்ற சின்னப்பொண்ணுவின் கூற்று அவளது பெண்ணியச் சிந்தனையையும், தொழில் பக்தியையும், துணிச்சலையும் ஒருங்கே காட்டுவதாய் அமைகிறது.

மாமன் இருசப்பன் சமூக விரோதிகளால் கைகால்கள் உடைக்கப்பட்டு வீட்டோடு முடங்கி விடுகிறான். நடு மகன் சுரேசுவும் அழுகிய சடலத்தைத் தோண்டி எடுக்கும் பொழுது புழுக்கள் மொய்த்த குழியில் மயங்கி விழுந்து மனநிலை பாதித்து வீட்டோடு முடங்கிவிடுகிறான். மூத்தவன் சின்னராசுவோ வீட்டைப் பற்றிச் சிறிதும் கவலையின்றி

கவுன்சிலரோடு ஒட்டிக் கொண்டு திரிகிறான். இந்தச் சூழலில் அத்தை முனியம்மாவின் குடும்பத்திற்காகவும், அவர்களுடைய வறுமை நிலைக்காகவும், வருந்தி அவர்களுக்கும் உதவ முனைகிறாள். இளையவன் சம்பத்தைப் பிணமெரிக்கும் பணியில் உடன் சேர்த்துக் கொண்டு அவனது கூலிப்பணம் அவர்கள் குடும்பத்தின் ஒரு வேளை உணவுக்காவது வழி செய்ய வகை செய்கிறாள். தன்னை முன்னர் உதாசீனப் படுத்தியவர்கள் என்ற உணர்வு சிறிதுமின்றி அவர்களுக்கு உதவும் பெருந்தன்மை பொருந்தியவளாக விளங்குகிறாள் சின்னப்பொண்ணு.

## தலைமைப் பண்பு

'தகனம்', 'சாருலதா' புதினங்களில், சின்னப்பொண்ணு, சாருலதாவைத் தலைமைப் பண்புடைய பாத்திரங்களாக ஆசிரியர் அழகாகச் சித்திரித்துக் காட்டியுள்ளார். 'தகனம்' புதினத்தில், சின்னப்பொண்ணு படிப்பறிவு இல்லாதவளாக இருந்தாலும் தன்னளவில் சிறந்த தலைமைப் பண்பு மிக்க பாத்திரமாகப் படைக்கப்பட்டுள்ளாள். பெருமழை பெய்து அவர்கள் வாழும் தாழாங்குப்பம் முழுதும் தண்ணீர் சூழ்ந்ததால், பாதுகாப்பான இடங்களில் அப்பகுதி மக்கள் தங்க வைக்கப்படுகின்றனர். மழையால் பாதிப்படைந்த அவர்களுக்கு வேண்டிய உதவிகளைப் பெற அக்குப்பத்தைச் சேர்ந்தவர்களை ஒன்று திரட்டிப் போராடி நிவாரணம் பெற்றுத் தருகிறாள் சின்னப்பொண்ணு.

மேலும், "இந்தப் பணத்தைப் பட்டுவாடா பண்ணும் போதும் . . . ஆரம்பத்தில் வந்திறங்கிய சோற்றையும், வாங்கத் துடித்துச் சண்டை போட்டுக் குழப்பமாய் ரகளை பண்ணியவர்களை ஒழுங்குபடுத்திப்

பொறுமையாய் நிற்க வைத்துச் சரிசெய்தது சின்னப்பொண்ணுதான்.'' (தகனம், ப.62) என்பதில் அவளின் தலைமைப் பண்பைக் காணமுடிகிறது.

## ஜரீனின் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை

இந்திய ஆண்மகனையே திருமணம் செய்ய வேண்டும் என்ற ஜரீனின் ஆசை ரகுவால் நிறைவேற்றப்பட்டது. ஆனால், தன்னால் ஸ்ருதியின் வாழ்க்கை வீணானதை அறிந்து தன் ரகுவை ஸ்ருதிக்கு விட்டுக் கொடுக்க முடிவு செய்கிறாள். ரகுவும் ஸ்ருதியும் திருமணத்தில் இணைய வேண்டும் என மனதார விரும்புகிறாள். ஜரீன் கர்ப்பமுற்ற சூழலிலும் ஸ்ருதிக்காக ரகுவை விட்டுக் கொடுக்க எண்ணும் அவளின் மனப்பக்குவமும், தனக்குப் பெண் குழந்தை பிறந்தால் அதற்கு "ஸ்ருதி'' என்று பெயரிடுவதாக உறுதி ஏற்பதும் அவளின் உன்னத குணத்தையும், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையையும் காட்டுகின்றன. "ப்ளீஸ் டோன்ட் ஃபீல் கில்ட் ரகு. நான் உங்களைக் குற்றம் சொல்லவேயில்லை. நான் உங்களை விட்டுப் பிரிவது ஸ்ருதிக்குச் சந்தோஷம் தரத்தான். அவள் வாழ்க்கையில் மீண்டும் வசந்தம் வருவதற்காகத்தான். என்னை நீங்கள் மனப்பூர்வமாயக் காதலித்தது உண்மையெனில் ஸ்ருதியை மறுமணம் செய்து கொள்ளத்தான் வேண்டும்!''

"இன்னமும் கண் விழிக்காத ஜுரத்தில் வதங்கிய ஸ்ருதியின் பக்கத்தில் ஒரு குட்டி 'பொக்கே' வைத்து, உன் வருங்கால மண வாழ்க்கைக்கு உளம் நிறைந்த வாழ்த்துக்கள். உன் ரகுவை விட்டுக்கொடுத்து எனக்கு வாழ்வளித்த நீதான் என் தெய்வம். எனக்குப் பெண் குழந்தை பிறந்தால் அவளுக்கு ஸ்ருதி என்று தான் பெயரிடுவேன்!'' (சு.பி.வீ., பக்.47-48) என்று பெண்ணின் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையை ஆசிரியர் அழகாகச் சித்திரித்துக் காட்டியுள்ளார்.

## சுருதியின் மன உறுதி

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்

திண்மை யுண்டாகப் பெறின்"[32]

என்னும் வள்ளுவரின் கூற்றிற்கிணங்க ஸ்ருதி மனஉறுதியுடையவளாகத் திகழ்கிறாள். ஸ்ருதியை ரகு திருமணம் செய்ய விரும்பிய பொழுது அவள் அத்திருமணத்திற்கு மறுப்புத் தெரிவிக்கிறாள். "எனக்கு மட்டுமே சொந்தமாயிருந்த பழைய ரகுவுக்குத்தான் என் நெற்றியில் குங்குமம் இடும் உரிமையுண்டு. உடலளவிலேயும் மனசளவிலேயும் இன்னொரு பெண்ணுக்கு உரிமையான இந்த ரகு வேறெ. என் கணவராய் நினைச்சிருந்த ரகு வேறே. அமெரிக்கா போறதுக்கு முன்னாடியிருந்த ரகுதான் என் கணவர். அவர்தான் இப்பவும் என் மனசிலே நிறைஞ்சிருக்கார். அவரோடதான் நான் ஆதர்ச வாழ்க்கை வாழறேன்.

"ஜரீனோட புருஷன் ரகுவுக்கு எந்தக் காரணத்துக்காகவும், எந்தச் சூழ்நிலையிலேயும் நான் மனைவியாக முடியாது." (சு.பி.வீ., ப.51) என்று கூறும் ஸ்ருதியின் கூற்றுக்களின் வாயிலாகப் பண்பாட்டினின்று பிறழாமல் வாழும் அவளின் வாழ்க்கை நிலை புலப்படுகிறது. பெண்களின் தெளிந்த சிந்தனை, மன உறுதி வெளிப்பட்டு நிற்பதைக் காணமுடிகிறது.

## பெண்களின் இலட்சியம்

இன்றையப் பெண்கள் இலட்சியம் கொண்டவர்களாக வாழ வேண்டும். பெண்கள் சோர்வடையாமல் இலட்சிய வெறியோடு விழிப்பாய் இருக்க வேண்டும். வைரமுத்து இதனை,

"நதிக்கரை ஓரத்து

நகரம்

வெள்ளப் பெருக்கை

எதிர்பார்த்து

விழிப்போடிருப்பது போல்

எப்போதுதம் விழிப்பாய் இரு.''[33]

என்கிறார். ஆ.பி. 'சூ.வி.வை', 'கதாநாயகி', 'சாருலதா', 'வே.ம.', 'க.ம.' போன்ற புதினங்களில் இலட்சியப் பெண்களைப் படைத்துக் காட்டியுள்ளார்.

'சூ.வி. வை' புதினத்தில்,

''லட்சிய உச்சி நோக்கி

ஒருபடி ஏறுவதற்குள்

ஓராயிரம் சறுக்கல்''

''இன்னொரு

நூற்றுக் கணக்கில்

வீதிநாடகம் நடத்தியாயிற்று

சரஸ்வதியின்

லட்சிய வெறியை

சீர்திருத்தப் பொறியை

அவர்களுக்குள் கடத்தியாயிற்று

பிரயோஜனம்?''

''கற்பூரமாய்ப் பற்ற வேண்டாம்

வாழை மட்டையாக வேணும்

உருமாறலாமே . . .

பெண் சிசுவைக்

கண்மூடவைக்கும் கொடுமை

வேண்டாமென்று

முடிவுகள் உருவாகலாமே . . . ”

“பெண்குழந்தை சாம்ராஜ்யம்

மலர்வதற்காக

கிழக்கையும் மேற்கையும்

வடக்கையும் தெற்கையும்

ஒன்றாய் இணைக்கிறாள்.” (சூ.வி.வை., பக்.52-54)

“பெண் குழந்தைகளின்

நெற்றிக்கண் திறக்கும்

அறிவுத் தொழிற்சாலையாகப்

பாவையூரை மாற்றுவேன்.”

“அறியாமை மோகத்தில்

இருண்டிருக்கும்

பெண்சூரியனை விடிய வைப்போம்.”

“பூவாயியைப் பூவாய் அணைத்தாள் சரஸ்வதி.”

(சூ.வி.வை., பக்.134-135)

இவ்வாறு இலட்சியவாதப் பெண்ணாக, சரஸ்வதியை ஆசிரியர் படைத்துக் காட்டியுள்ளார்.

‘சாருலதா’ புதினத்தில்,

“அதைத்தான் சொல்லவர்றேன். சின்னவயசிலேர்ந்தே என்னோட ஒரே கனவு படிச்சு முடிச்சு வேலைக்குப் போகணும். கைநிறையச் சம்பாதிச்சு அம்மாவுக்குத் தரணும்கறதுதான். இந்தக் கல்யாணத்தாலே வீடும் பணமும்

கிடைக்கலாம். ஆனா ஒவ்வொரு நாளாய் நினைச்சு ஆசையாய் வளர்த்த என் கனவு நிறைவேறாது.'' (சாருலதா, ப.46)

இவ்வாறு சிறந்த, புகழ்பெற்ற நடிகரை மறுமணம் செய்து கொள்ள மறுக்கும் இலட்சியவாதப் பெண்ணாக ஆசிரியர் சாருவைப் படைத்துக் காட்டியுள்ளார்.

'கதாநாயகி' புதினத்தில்,

"அக்கா அடுத்த வாரம் டி.டி.பரீட்சை எழுதறேன். பாஸ் பண்ணிடுவேன். ஒரு டைப் இன்ஸ்டிட்யூட் வச்சுக் குடுத்துடு. லோன் போட்டாவது மெஷின் வாங்கிடலாம். ஒரு மூணு வருஷம் நல்லபடியாய்ச் சம்பாதிக்கணும். அதுவரைக்கும் கலியாணம் அது இதுன்னு என்னைத் திசை திருப்பிடாதே.''

தன் லட்சியத்தில் இத்தனை தெளிவாய் இருக்கும் பெண் கலியாணத்திலும் ஜெயிப்பாள். எந்த மாதிரியான புருஷன் தனக்குத் தேவை என்பதிலும் தெளிவாய் இருப்பாளே . . . நம்மில் பாதிப் பெண்களுக்கு அந்தத் தெளிவு இல்லாததால் தானே சம்சார சங்கீதம் அபஸ்வரமாய் ஒலிக்கிறது. (கதாநாயகி, ப.21) இவ்வாறு பூரணியின் குறிக்கோள் தன்மையை ஆசிரியர் வெளிப்படுத்தியுள்ளார்.

## பெண் விழிப்புணர்வு

ஆ.பி. தன்னுடைய படைப்புகளின் வாயிலாக மக்களையும், சமூகத்தையும் விழிப்புணர்வு பெறச் செய்கிறார்.

'சூ.வி.வை' புதினத்தில்,

". . . . . . . . . .

வார்த்தை கேலிச் சடுகுடு ஆடியது.

"ஆண் குழந்தை, பெண்குழந்தை

வேறுபாடு பாராமல்

தாய்ப்பால் சமமாய்த்தான் சுரக்கிறது.”(சூ.வி.வை. ப.21)

ஆண்குழந்தையும், பெண் குழந்தையும் சமம் என்ற உண்மையை உரைப்பதோடு மட்டுமல்லாமல் ஆண் குழந்தை பிறப்பதற்குக் காரணம் ஆண்களே என்ற விஞ்ஞானப் பூர்வமான உண்மையையும் கூறுகிறார்.

“ஆண் பெண் பால் வேறுபாட்டிற்கு

ஆணின் ஜீவ அணுவே

காரணியாய் இருக்கிறது

உங்களின் வித்தியாச உற்பத்திக்கு

என்னைக்

குற்றவாளிக் கூண்டில் அடைப்பது

நியாயமா?

கேள்வியால் புடைப்பது நியாயமா . . .?” (சூ.வி.வை., ப.21)

சமூக அக்கறையுள்ள சரஸ்வதி சுயநலமாக வாழவில்லை. பாரதி என்ற தனது பெண்குழந்தைக்குப் பிறகு இன்னொரு குழந்தையைத் தத்து எடுக்கத் தீர்மானிக்கிறாள். பெண் சிசுக்கொலை அதிகமாக நடைபெறும் தர்மபுரி மாவட்டத்தில் உள்ள பாவையூர் கிராம மக்களுக்குத் தன் மாணவிகளோடு சென்று விழிப்புணர்வுப் பிரச்சாரம் செய்கிறாள். வறுமையின் காரணமாக சங்கரம்மா பெண் சிசுக் கொலையை நியாயப்படுத்துவதை எழுதுகையில் சமுதாயத்தின் குரலே ஒலிக்கிறதைக் காணலாம்.

“படிப்பும் பட்டமும்

பொருளாதாரச் சுதந்திரமும்

பெண்ணின் சுவாசக் காற்றில்

சுதந்திரத்தை விதைக்கவில்லை . . .

அவர்களுக்கான காற்றில் மட்டும்

கந்தகமும், கரியமில வாயுவும்

நெருப்புக் கங்குகளும்

வெறுப்புக் கங்குகளும்

பௌதிகக் காரணிகள் . . .

“இதோ . . .

இருபத்தொன்றாம் நூற்றாண்டின்

விடியல் -

உள்ளங்கையில் உதயமாகிவிட்டது

பெண்மட்டும்

கற்காலத்திலேயே சிறை வைப்பா?

சமூக அவலத்துக்கு

அவளே பொறுப்பா . . .? (சூ.வி.வை., ப.29)

என்று ஆசிரியர் சரசுவதி வாயிலாக சமுதாயத்தில் பெண்களிடத்து விழிப்புணர்வைத் தூண்டுகிறார்.

“காத்தைக் குடிச்சாப்

பசிபோயிடும்னா

எம்புட்டுச் சொகம்?

பத்துப் பைசா சம்பாதிக்கப்

பத்து நாளு

குட்டிக்கரணம் போடறேன்.

ஒருவாய்க் கஞ்சிகுடிக்க

நூறு நாளா

பட்டினியைக் குடிக்கிறேன் . . . !!

மார்பிலடித்து

மாலையாய்க் கண்ணீர் விட்டாள்.'' (சூ.வி.வை., ப.74)

தன்னுடன் பணிபுரியும் சக பேராசிரியர்களுக்கும் அவ்வப்போது துணிவைக் கொடுக்கும் வார்த்தைகளை ஊட்டுகிறாள். ஏனெனில், படித்து வேலை பார்த்தால் மட்டுமே பெண்களின் அடிமைத்தனம் போய்விடுமா? பெண்களின் நிலைமை இன்று எப்படி உள்ளது?

இதனைப் போன்று 'சாருலதா', 'தகனம்', 'கதாநாயகி', 'வே.ம', 'க.ம', 'வி.நே', 'சூரசம்ஹாரம்', 'சி.சி.எ' போன்ற புதினங்களில், துடிப்புமிக்க பெண்களைப் படைத்துக் காட்டிச் சமூகத்திற்கு விழிப்புணர்வுக் கருத்துக்களை எடுத்துரைக்கிறார்.

## இன்றைய நிலையில் பெண்கள்

ஓர் அதிகார வர்க்கத்துப் பெண் அதிகாரியாகவே இருக்கிறாள். கீழ் மட்டத்துப் பெண்களுக்கும், தன் இனத்தார்க்கும் மறுக்கப்படும் நியாயங்களை வழங்க வேண்டுமென்ற வகையில் பெண்ணால் எந்த நன்மையும் செய்துவிட முடியவில்லை. எல்லாப் பிரிவுகளுக்கும் பெண் உட்பட்டவளே, பெரும்பான்மைத் தனி நபர்களும், நிறுவனங்களும் பெண்ணை எந்தவிதத்திலேனும் அடக்கியாளத் தான் செயல்படுகின்றன. அறியாமை இருளை அகற்றிக்கொள்ள வாய்ப்புக் கிடைத்ததைப் பயன்படுத்திக் கொண்டு, ஆங்காங்கு பெண்கள் மக்களும் நியாயக்குரல் எழுப்புகின்றனர். இவற்றின் விளைவாகக் குழந்தைத் திருமண எதிர்ப்பு, தேவதாசி ஒழிப்பு, கைம்பெண் மறுமணம், பெண்கல்வி, வேலைவாய்ப்பு,

சொத்துரிமை, என்றெல்லாம் சட்டப்பூர்வமான நன்மைகள் பட்டியலிடப்பட்டிருக்கின்றன.

வாழ்க்கைத் தேடலில் சமத்துவத்தை நியாயமாக்க மனிதவர்க்கம் இரண்டும் சேர்ந்தும், சார்ந்தும் செயல்பட வேண்டும். வளர்ந்துவரும் காலப் பரிணாமச் சிந்தனைப் போக்கினை ஆணும், பெண்ணும் ஏற்று ஒரு பண்பாட்டு மீட்சியை வாழ்க்கை நோக்கில் நிலைநாட்டும் போது கலை வடிவங்கள் உயிர்பெறும் அப்போது வாழ்வும் அர்த்தமடையும்.

'சூ.வி.வை' புதினத்தில்,

"சமூகத்தில் பெண்பாடு
பிரச்னையானதால் தான்
பண்பாடு தாண்டிப்
பறக்கிறார்கள் பெண்கள்
ஆண்களின் நச்சரிப்பு
எல்லை மீறியதால் தான்
புதுநூற்றாண்டின்
புரட்சிச் சூரியன்
விதைக்கின்ற உறவுச்சுடர். . . .
ஆரத்தி எடுத்து வரவேற்போம் . . . .(சூ.வி.வை. பக்.123-124)

என்று ஆசிரியர் இன்றைய பெண்களின் நிலையைப் பற்றி எடுத்துக்காட்டியுள்ளார்.

## தொகுப்புரை

தம்மைச் சுற்றி வாழ்ந்து வருகின்ற சமுதாயத்தை எழுத்தாளர் நோக்கும்போது அவருடைய பார்வைக்கும் மனத்திற்கும் பல

கருத்துக்கூறுகள் கிடைக்கின்றன. பெரும்பாலான எழுத்தாளர்கள் தம் வாழ்க்கையில் ஏற்பட்ட அனுபவங்களையும் நேரில் கண்ட காட்சிகளையுமே கதைப் பொருளாக அமைக்கின்றனர். ஆ.பி. பெண்கள் செய்யும் தொழிலையும், குடும்பத்தைச் செயல்படுத்தும் முறைகளையும் தெளிவாகத் தனது புதினங்களுள் சுட்டுகிறார்.

பெண்ணியச் சிக்கல்களை தன் நிலைகளில் இருந்து பல்வேறு கோணங்களில் உற்று நோக்கியும் படைத்தும் வந்திருக்கின்றார். இவரின் படைப்பு சமுதாயத்தில் வேரோடி கிடக்கும் அடிமைத் தனத்தை மானிடத்திலிருந்து இனம் பிரித்துக்காட்டும் வன்மையைப் பெற்றிருக்கின்றன. இவர் தம் புதினத்தின் கருத்தோட்டமாக விளங்கும் பெண்ணியச் சிக்கல்களைப் புதினங்கள் ஒவ்வொன்றும் அழுத்தமாக முன்னிறுத்தியுள்ளன.

ஆணாதிக்கத்திலிருந்து விடுதலை, சமுதாயத்தில் ஆண்களுக்கு இணையான உரிமை இழிநிலையிலிருந்து முன்னேற்றம் ஆகியவற்றை மையமிட்டு ஆ.பி. விளக்கியுள்ளார். பெண்ணிய நோக்கம், இதுவரை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள அனைத்தையும் ஆ.பி. மறுபரிசீலனைக்கு முன்வைக்கிறார். பெண்களுக்குச் சம உரிமை தரல் வேண்டும் என்பதே ஆ.பி.யின் பெண்ணியச் சிந்தனைக் கருத்தாக உள்ளது.

பெண் - பிரபஞ்சத்தின் மையப்புள்ளி. பூமிச் சுழற்சியின் உயிர்த்தளம். பெண் காற்றின் சுவாசம். மண்ணின் ஆதிக்களிமண். வானத்தின் தாய்மைத் துணுக்கு. கடலினைக் கர்ப்பம் சுமப்பவள். நெருப்பைத் தின்று உயிர்ப்பவள். சகலத்துக்கும் உயிரூற்று பெண். ஆனால், அவளின் உயிர் தேவையற்றதெனக் கருதுகிறது சமூகம். சரிவு - இயற்கையானதல்ல. சமூகம் செய்யும் உயிர்க்கொலையின் அவலம் இது.

மாதவம் செய்தால்தான் மங்கையராய்ப் பிறந்து வாழ்தல் சாத்தியம். அல்லது கருக்கொலையும் சிசுக்கொலையுமே சத்தியம். தனக்குள் ஐம்பூதங்களையும் அடக்கி வைத்திருப்பவள். இரவல் மொழியும் இரவல் ஒளியுமே அவளுக்கு சாஸ்வதம் எனக் கட்டியம் கூறுகிறது. சமூகம், அப்பாவின் முகமும், கணவனின் முகமுமே அவள் அணிய வேண்டிய இரவல் முகங்கள் எனக் கட்டாயப் படுத்துகிறது. சமூகம், தனக்கெனச் சுயமுகம் தேடுபவள் மீது கரும்புள்ளி, செம்புள்ளி குத்தி நசுக்குகிறது பெண் - நிலவு அல்ல. கடன் வாங்கி ஒளிர்ந்து, வளர்ந்து தேய்ந்து கரைந்து காணாமல் போய்விட. பெண் இன்னொரு குடும்பத்துக்கான உயிர். பெண் மீது சூல் கொள்ளும் கருமை மேகங்களை விலக்க முயல்வதே பெண்ணியச் சிந்தனை என பெண்ணியப் போராட்டத்திற்கு ஓங்கி குரல் கொடுக்கும் பதிவை ஆ.பி. புதினங்கள் பதிவாக்கியுள்ளன.

பெண்ணின் சிக்கல்களை சித்திரித்துக்காட்டிய ஆசிரியர் பெண்ணின் பெருமையையும் கூறத் தவறவில்லை. பெண்ணியச் சிக்கல்களுக்குத் தீர்வாக படைப்புகளில் புதுமைப் பெண்களையும், புரட்சிப் பெண்களையும் படைத்துக்காட்டியுள்ளார். ஆணாதிக்கப்போக்கிற்கு அதிர்ச்சி அளிக்கும் சிந்தனையை ஆ.பி., பரவலாக்கியுள்ளார் எனலாம்.

# அடிக்குறிப்புகள்

1. இரா. பிரேமா. பெண்ணியம் அணுகுமுறைகள், ப.19.
2. மேலது., ப.18.
3. ச. முத்துச்சிதம்பரம். பெண்ணியம் தோற்றம் வளர்ச்சி., ப.11.
4. தேவதத்தா. பெண்ணியம் ஒரு வரலாற்றுப் பார்வை. ப.10.
5. இரா. பிரேமா. பெண்ணியம். ப.2.
6. கோ. சரோஜா. பெண் படைப்பாளர்களின் புதினங்களில் பெண்ணியப் பார்வை. ப.31.
7. இலக்கியத்தில் பெண்ணியச் சிந்தனைகள், ப.168.
8. மா. சாலமன் சித்து. பெண்ணியம் போட்ட பதியங்கள், ப.212.
9. இலக்கியத்தில் பெண்ணியச் சிந்தனைகள், ப.168.
10. பாரதிதாசன், தேனருவி., ப.96.
11. தொல்காப்பியம், பொருள், நூ.8.
12. மு. வரதராசனார் (உரை), குறள், எண்.57.
13. பாரதியார் கவிதைகள், பெண்விடுதலைக் கும்மி, ப.6.
14. த. கிருஷ்ணன், பெரியாரின் பெண்ணியச் சிந்தனைகள், ANJAC Journal, 1998, ப.58.
15. பாரதியார், மு.நூ., ப.5.
16. பாரதிதாசன், இருண்டவீடு, ப.33(1-2)
17. கிரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, 1992. ப.819.
18. மேலது., ப.819.
19. மேலது., ப.399.

20. வாழ்வியற் களஞ்சியம், தொகுதி-6, ப.870.

21. கே. செண்பகம் ராமசாமி. பெண்கள் படைப்பில் பெண்கள். ப.111.

22. பாரதியார், மு.நூ., ப.20.

23. பாரதிதாசன் கவிதைகள், ப.209.

24. வைரமுத்து, இன்னொரு தேசியகீதம், ப.48.

25. பாரதிதாசன் கவிதைகள், தொகுதி-1, ப.93.

26. ஐ. ராஜ், சே.ச. சக்தி திரண்டால், ப.29.

27. கோ. சரோஜா. பெண் படைப்பாளர்களின் புதினங்களில் பெண்ணியப் பார்வை, ப.115.

28. ச. கணேசலிங்கம், பெண்ணடிமை தீர. ப.27.

29. நா. பார்த்தசாரதி, புதுமுகம், முன்னுரை.

30. இரா. பிரேமா. பெண்ணியத்திறனாய்வு, ப.47.

31. பாரதியார், மு.நூ. ப.208.

32. மு. வரதராசனார் (உரை), குறள், எண்.54.

33. வைரமுத்து, மு.நூ., ப.75.